உ

குமரன் துணை.

விவேகபாநு.

வால்யூம் 5 } 1906வரு ஜூன்மீ { புத்தகம் 6

திருநெல்வேலி மாகாணக்கூட்டம்.

சென்னை இராஜதானியின் 14-வது மாகாணச் சபையானது நாளிதுமீ 20உ பகல் 2-மணிக்குக் கூடிற்று. சென்னை இராஜதானியின் நாலாபக்கங்களினின்றும் 350 பிரதிகளுக்கு மேல் வந்து கூடினார்கள். அக்காட்சியைக் கண்டுகளிக்க சுமார் 700 பேர் வரை வந்திருந்தனர். இத்திருநெல்வேலி ஜில்லா சென்னை இராஜதானியின் ஒரு மூலையிலிருந்த போதிலும் வெகுதூரங்களிலிருந்து பிரதிநிதிகள் விஜயஞ்செய்ததானது திருப்திகரத்தைக் கொடுக்கக் கூடியது. இதனால் ஜனங்கள் இராஜரீக விஷயத்தில் மிக்க சிரத்தை எடுத்துக்கொண்டு வருகிறார்களென்பது நன்கு விளங்குகின்றது. இவ்வாறு ஊக்கத்துடன் விஜயஞ்செய்தவர்களை மகா-௱-௱-ஸ்ரீ சிங்கம்பட்டி ஜமீன்தார் அவர்கள் உபசார அழைப்புக்கமிட்டியின் அக்கிராசனாதிபதியாக விருந்து நல்வரவுகூறி அழைத்தனர். இவர் சொன்ன விஷயங்களில் இரண்டு விஷயம் முக்கியம். முதலாவது செல்வச் சீமான்களாகிய ஜமீந்தார்கள் பொதுஜன நன்மைக்குப் பாடுபட்டுழைக்க வேண்டுமென்றது ஒன்று. சட்ட நிரூபணசபையின் அங்கத்தினராக நியமிக்கப்படும் ஜமீன் மெம்பரை பெரிய ஜமீன்தார்கள் தெரிந்தெடுக்க வேண்டுமென்பது மற்றொன்று. இஃதோர் நல்ல யோசனையே.

ஜமீன்தார் அவர்கள் பேச்சு முடிந்தவுடன் மாகாணச்சபையின் அக்கிராசனாதிபதியாக ஹைகோர்டு வக்கீல் [illegible] வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் பிரேரேபிக்கப்பட்டன[illegible] இந்நிபுணருடைய

வர்க்கு வல்லபத்தை அறியாத புத்திமான்கள் இவ்விராஜதானியிலிருக்கிறார்களோ என்பது சந்தேகம். சுமார் ஒன்றரைமணி நேரம் சிங்கம் கர்ச்சித்ததுபோல் கர்ச்சித்தனர். இவர் வாக்கு அசுவதாடியினும் மேல் என்றே கூறும்படி அவ்வளவு வேகமுடையது. வார்த்தைகள் கேட்போர் காதையும் மனத்தையும் பிணிக்கும் வல்லமையுடையன. இவரது உபந்நியாசம் காங்கிரெஸ் மகாசபைக்குப் பொருத்தமான உபந்நியாசமாகவே இருந்தது. மாகாணச் கூட்டத்துக்கு இத்துணை ஆழ்ந்த உபந்நியாசம் வேண்டுவதில்லை யென்பது சிலர் கொள்கை. இருந்தாலும் இம்மகான் பல பொது விஷயங்களைச் சுட்டிப் பேசினர்.

துரைத்தன சம்பந்த விஷயமாய் நாம் செலுத்தும் கருத்துப் போதாதென்றும் பின்னும் ஊக்கத்துடன் உழைத்து வரவேண்டுமென்றும் காங்கிரஸ் சபைக்கு சென்னை 22 ஜில்லாக்களில் 7 ஜில்லாக்களில் மட்டும் காங்கிரஸ் கிளைச்சபை யிருப்பது போதாதென்றும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொருதாலூகாவிலும் ஒவ்வொருகிளைச்சபை இருக்கவேண்டியது இன்றியமையாததென்றும், அச்சபையார் ஜனங்களுக்குள் துரைத்தன விஷயங்களைப்பற்றிய அறிவை பரவச்செய்தல் வேண்டுமென்றும் அப்பொழுதுதான் நாம் நங் குறைகளைச் சரிவரத் தெரியப்படுத்தி நம் விருத்தியைத் தேடிக்கொள்ளலாமென்றும் தெளிவாகவும் அழகாகவும் வற்புறுத்திப் பேசிய பின்னர் தற்காலம் சட்ட நிரூபண சபையிலிருக்கும் மெம்பர்களின் தொகை போதாதென்றும் இந்திய சட்டநிரூபண சபையில் 32 பேர்களிருக்க வேண்டு மென்றும் லோகல் கவர்ன் மெண்டில் 40 பேர்கள் இருக்க வேண்டு மென்றும் அவர்களுக்கு இப்பொழுது இருப்பதைவிட அதிக சுதந்தரங்கள் கொடுக்க வேண்டு மென்றும் பேசினர். பிறகு ஜில்லா போர்டு முனிசிபாலிடி முதலிய சீர்திருத்தங்களைப் பற்றியும் கீழ்த்தர வகுப்புக் கல்வியைப் பற்றியும் கைத்தொழிற் கல்வியைப் பற்றியும் ஹிந்து தேவாலய முதலிய தர்ம பரிபாலனங்களைப்பற்றியும், அகாதமான இராணுவச் செலவைப் பற்றியும் செட்டில் மெண்டு சீர்திருத்தங்களைப் [illegible]ற்றியும் இந்தியர்களை அதிகமாகச் சர்க்கார் உத்தியோகத்தில் ஏற்[illegible]க வேண்டுமென்றும், துரைத்தனத்தார் குடிக

விடத்தில் அவநம்பிக்கை சிறிதும் வைக்கக் கூடாதென்பதைப் பற்றியும், மாஜிஸ்டிரேட் அதிகாரம் ஜட்ஜி அதிகாரம் இவைகளின்பிரிவைப்பற்றியும், இன்னும் இவை போன்ற முக்கிய விஷயங்களைப் பற்றியும் கம்பீரமாகவும் நிர்ப்பயமாகவும் பேசி முடித்தனர்.

ஜப்பானுக்கும் இங்கிலாந்துக்கும் சிநேககரமான உடன்படிக்கை ஏற்பட்டிருப்பதாலும் இந்தியாமீது படையெடுப்பார்களோ என்று நம்பப்பட்ட ருஷியர்கள் ஜப்பானியர்களால் தோல்வியுண்டு தளர்ந்துபோனபடியாலும் இந்தியாவானது இயற்கையிலேயே மிகவும் தரித்திரப்பட்டிருப்பதாலும் இராணுவச் செலவைக் குறைக்க வேண்டுமென்று சபா நாயகர் காரணங்களெடுத்துக்காட்டியது வெகு அழகாயிருந்தது. மிக்க அமைதியும் சாமர்த்தியமும் வாய்ந்த இவரது உபந்நியாசம் நேரில் கேட்கப் பாக்கியம் பெறாதவர் வாசிக்குங்கால் இன்பமடையாமலிரார். இவரது அபிப்பிராயங்கள் இவரது கம்பீரதொனிக்கிணங்கவே இருந்தன. பின்னர் சபையார் கூடிச்செய்த 16 தீர்மானங்களை மற்றோர் இடத்திற் காண்க.

நான்காவது தீர்மானத்தில் தேவஸ்தான வரும்படிகளில் பாதியை யதாப்பிரகாரம் செலவு செய்து மற்றைப் பாதியைச் சம்ஸ்கிருதம் தமிழ் முதலிய பாஷைகளின் அபிவிருத்தியின் பொருட்டுச் செலவிடவேண்டுமென்று காணப்பட்ட விஷயமானது மிகவும் பாராட்டற்பாலது. இம்மாகாணக் கூட்டத்திற்றான் பாஷை விஷயம் கவனிக்கப் பட்டிருக்கின்றது. ஜனங்கள் சுயபாஷையைக் கவனிக்கும் வரை நாடு சீர்திருந்துவது முடியாதவிஷயம். தேவஸ்தான முதலிய தர்ம நிதிகள் நம் முன்னோர் ஏற்படுத்தியதற்கு முக்கிய காரணம் கல்வியபிவிருத்தி செய்வதுதான். அந்நோக்கம் தற்காலம் சிந்திப்பாரற்றுச் சீர்குலைந்திருக்கிறது. இச்சமயத்தில் இச்சபையார் இதைப் பற்றிப் பேசித் தீர்மானித்தது காலப்பொருத்தமானதே.

பத்திராதிபர்.

பதினான்காவது சென்னை மாகாணக் கூட்டத்தின் தீர்மானங்கள்.

I

சென்னைராஜதானியின் பலபாகங்களிலுமிருந்துவந்துகூடியிருக்கும் பிரதிநிதிகளின் கூட்டமாகிய இச்சபை வேல்ஸ் இளவரசரவர்கள் இந்தியருடைய ராஜபக்தியை உணர்ந்து அதை வியந்து கூறியதற்காக மிகுந்த நன்றி பாராட்டுதலோடு, இந்தியர்க்கு அநுதாப உணர்ச்சி காட்டவேண்டுமென்னும் இளவரசருடைய விருப்பம் செயலளவிலும் முற்றுப்பெறுமென்றும் ஆவலாய் நம்பப்படுகின்றது.

II

a. அவசியமான விடங்களில், முனிசிபல் செயர்மென்களுக்கு உதவியாயிருக்கும்படி காரியதரிசிகள் நியமிக்கப்பட வேண்டுமென்றும், அவர்கள் முற்றிலும் செயர்மென்களின் அதிகாரத்தின் கீழ்நடக்க வேண்டுமென்றும், செயர்மென்களுடைய சம்பந்தமில்லாமல் காரியதரிசிகளை நியமிக்கும் வழக்கம் நிறுத்தப்பட வேண்டுமென்றும்,

b. எலக்ஷன்மூலமாய் செயர்மென்களைத் தெரிந்தெடுக்கும் வழக்கத்தை இன்னும் அதிகமாய் அநுசரிக்க வேண்டுமென்றும்,

c. தாலுகா போர்டு மெம்பர்களின் தொகையை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்றும், அவர்களுள் போதிய பக்ஷத்தார் எலக்ஷன் மூலமாகவே தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு தாலுகாவின் மொத்த விஸ்தீரணத்தைத்தக்கதக்கபடி வட்டங்களாகப்பிரித்து ஒவ்வொரு வட்டத்திலும் யூனியன் பஞ்சாயத்தாராலாவது குறிப்பிட்ட ரிவினியூ அல்லது கிஸ்தி செலுத்தும் மனிதர்களாலாவது ஷை மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்றும்,

d. தாலூகா போர்டாரால் ஜில்லா போர்டுக்குத் தெரிந்தெடுக்கப்படும் மெம்பர்களின் தொகையை அதிகப்படுத்த வேண்டுமெ

ன்றும், அவ்வாறு தெரிந்தெடுக்கப் படும் மெம்பர்கள் உத்தியோகஸ்தரல்லாத மெம்பர்களா யிருக்கவேண்டு மென்றும்,

e. ஜில்லா போர்டுகளுக்கும் தாலூகா போர்டுகளுக்கும் நியமிக்கப்படும் வைஸ் பிரஸிடெண்டுகள் எலக்ஷன் மூலமாய்த் தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் அபிப்பிராயப் படுகிறது. இந்தத் தீர்மானம் திருநெல்வேலி முனிசிப்பல் செயர்மென் ஸ்ரீ கைலாசம் பிள்ளையவர்களால் பிரேரேபிக்கப் பட்டு கோயம்புத்தூர் ஸ்ரீ சி. வி. வெங்கட்டராம அய்யங்கா ரவர்களால் ஆமோதிக்கப் பட்டு, முடிகொண்டான் ஸ்ரீ மகாதேவய்ய ரவர்கள் முதலிய சபையாரால் ஆதரிக்கப்பட்டது.

III

இந்த ராஜதானியின் லாண்டு ரெவினியூ செட்டில்மெண்டு விஷயமாய் இந்தியா கவர்ண் மெண்டா ரவர்களால் செய்யப்பட்டிருக்கும் தீர்மானமானது அவர்கள் இதற்குமுன் இந்தியர்களுக்குச் செய்திருக்கும் உறுதிமொழிக்கும் சத்தியத்திற்கும் விரோதமாயிருக்கிறதெனவும், விவசாயிகளுடைய அபிவிர்த்திக்கும், பொருட் பெருக்கத்துக்கும் சிறிதும் அநுகூலமாயில்லை யென்றும் இந்த சபை அபிப்பிராயப் படுகிறது மன்றி ஒரு செட்டில்மெண்டு நடந்து அறுபது வருஷ காலத்துக்குள் வேறு செட்டில் மெண்டு நடவாமலும் அகவிலை ஏற்றம் முதலிய தக்க காரணங்களின்றி ஜாஸ்தி தீர்வை ஏற்படாமலு மிருக்கும்படி சட்டமூலமான ஏற்பாடு செய்யப்பட வேண்டு மென்றும் பிரார்த்திக்கின்றது.

வழக்கமாய் விளையும் விளைவிற்கு மூன்றிலொருபாகத் துக்குக் குறைவாய் விளைந்த நிலங்களுக்கு வஜாக்கொடுக்கும் படிக்கும், தண்ணீர்கிடைக்காத காரணத்தால் சாகுபடி யின்றிக் கிடக்கும் நிலங்களுக்கு வஜா செய்யும் படிக்கும்,சர்வே சப்டிவிஷன்.நிலங்களுக்குக் குடிகள் இலகுவாய் அப்ளிக்கேஷன் செய்து வஜாப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டிய சௌகரியங்கள் கொடுக்கும் படிக்கும் ரிவினியூ வசூல் சட்டத்தில் சிவில் புரோசியர் கோடின் 310 ஏ செக்ஷனில் கண்ட நிபந்தனைகளைச் சேர்க்கும் படிக்கும் இந்த சபை வேண்டிக் கொள்ளுகிறது.

இந்தத் தீர்மானம் ஸ்ரீ ஜோகய்யா பந்துலு அவர்களால் பிரே ரேபிக்கப்பட்டு ஸ்ரீ கே. ஜி. கிருஷ்ண சாமி ஐயரவர்களால் ஆமோ திக்கப் பட்டு ஸ்ரீ எம். ஆர். இராமகிருஷ்ணய்யரவர்கள் செங்கல் பட்டு ஸ்ரீ சாமிகோவிந்த நாயுடு முதலிய சபையாரால் ஆதரிக்கப் பட்டது.

IV

தேவாலயங்கள் மடங்கள் சம்பந்தமாய் ஏற்படுத்தப் பட்டிருக் கும் 1868-ம் வருஷத்து 20-ஆவது ஆக்டு முற்றும் பிரயோஜனமற் றதாய்ப் போய்விட்டது மன்றி அநேக கெடுதிகளுக்கும் இடங்கொ டுத்து விட்டதால், அவ்வித பொதுச் சொத்துக் களையும் ஆலயங்க ளையும் தக்க வழிகளால் பாதுகாக்க வேண்டுமென்றும் ஆலயங்களி ன் வரவு செலவுகளைப்பற்றி வருஷந்தோறும் ஒரு ரிப்போர்ட்டு பிரசுரிக்க வேண்டு மென்றும்,

கமிட்டிமெம்பர்கள் 5 வருஷக்காலந்தான் வேலைபார்க்கலாமெ ன்ற நிபந்தனை வேண்டுமென்றும் தேவஸ்தான வரும்படிகளில் பாதி யை யதாப்பிரகாரம் செலவு செய்து மற்றப்பாதியை சம்ஸ்கிருதம் த மிழ்முதலிய பாஷைகளின் அபிவிர்த்தியின் பொருட்டுச் செலவிட வேண்டுமென்றும் விரும்புகின்றது.

இத்தீர்மானம் ஸ்ரீ டி.வி.சஞ்ஜீவிராவ் அவர்களால் பிரேரேபிக்கப்பட் டு ஸ்ரீ எஸ்.ஸ்ரீநிவாசய்யரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீ ஞானசிகா மணி முதலியாரவர்கள் முதலிய சபையாரால் ஆதரிக்கப்பட்டது.

V

1. இத்தேசத்தின் தொழிற் கல்வியை அபிவிர்த்தி செய்யவே ண்டிய விஷயமாய் பொது ஜனங்கள் அதிக ஊக்கம் காட்டவேண்டு மென்றும் அதன்பொருட்டு கவர்ன்மெண்டார் தக்க பொருளுதவி செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறது.

2. இப்பொழுது பிரைமெரிக் கல்வியின்பொருட்டு 40-லக்ஷ ரூபாய் அதிகமாய்க் கொடுத்திருப்பதற்காக கவரண்மெண்டாருடைய இஷ்டப்பிரகாரம் தேசத்தில் பற்பல பாகங்களிலும் பிரைமெரிக் கல்

வியைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்றும் அதன்பொருட்டு ஒரு சட்டம் பிறப்பிக்க வேண்டுமென்றும் வேண்டுகின்றது.

இத்தீர்மானம் ஸ்ரீ ஜி. ஏ. நடேசன் அவர்களால் பிரேரேபிக்கப் பட்டு ஸ்ரீ எஸ். கே. நாயர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீ. எஸ் ராஜகோபாலாச்சாரியார் ஸ்ரீ வி. ஓ. சிதம்பரம்பிள்ளையவர்கள் முதலிய சபையாரால் ஆதரிக்கப்பட்டது.

VI

கவரண்மெண்டாரால் பந்தோபஸ்து செய்யப்பட்டதும் படாததுமாகிய சிறைக்காடுகளில் போதுமான பாகத்தை குடிகளுடைய உபயோகத்துக்கு விட்டுவிடும்படியும் சகாயமான விலைக்குக்கிடைக்கும்படி விவசாயத்துக்குவேண்டிய கம்பு மரங்களும் விறகுகளும் விற்பனைசெய்யும்படிக்கும் இச்சபை விரும்புவதுடன், ரிசர்வு பாரஸ்டுகளில் கால் நடைகளை மேய்ப்பதற்கு கால் நடைகளை பவுண்டிலடைத்தாவது, அல்லது மேய்ப்பவர்களை பிராசிக்கியூஷன் செய்தாவது நஷ்டத்தை நிவர்த்திக்கலாமே தவிர இரண்டுவிதத்திலும் தண்டிக்கப்படாதென்றும், அவ்வாறு வாங்கப்படும் காம்பன்ஸேஷன் கவரண்மெண்டாருக்குண்டாகும் நஷ்டத்துக்கு மூன்றுமடங்கு அதிகமாய் இருக்கவேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகின்றது.

இத்தீர்மானம் மிஸ்டர் பாம் பீட்டர் பிள்ளையவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணம ராஜு அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீ ஏ. சிதாராமய்யர் அவர்கள் ஸ்ரீ சி. ஆர். வீரராகவாசாரியார் முதலிய சபையாரால் ஆதரிக்கப்பட்டது.

VII

கவரண்மெண்டு அதிகாரிகளிடம் நீதி அதிகாரத்தையும் (எக்சிகியூட்டிவ்) நிர்வாக அதிகாரத்தையும் ஒன்றாய்க் கொடுத்திருப்பது கூடாதென்றும், ஒவ்வொருடிபார்டுமெண்டு அதிகாரத்தையும் வேறே பிரித்துவிடவேண்டுமென்றும் அபிப்பிராயப்படுவதுடன் இவ்விஷயத்தைப்பற்றி இந்தியா மந்திரிக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கின்றது.

இத்தீர்மானம் விசாகப்பட்டணம் ஸ்ரீ வெங்கட்டராமய்யரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு சேலம் ஸ்ரீ பி. வி. நரசிம்மய்யரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீ என். கே. ராமசாமி ஐயரவர்கள் முதலிய சபையாரால் ஆதரிக்கப்பட்டது.

VIII

கவரண்மெண்டார் இப்பொழுது நியமித்திருப்பதைப் பார்க்கிலும் மிகவும் அதிகமான இந்தியர்களை பற்பல டிபார்ட்டுமெண்டுகளிலும் நியமிக்கும் படிக்கும் உயர்தர உத்தியோகங்களுக்கு பரீக்ஷை முறையால் இந்தியர்களை நியமிக்கும் வழக்கத்தைப்பழையபடி அநுசரிக்கவேண்டுமென்றும் சென்னை ரெவினியூ போர்டிலும் எக்சிகியூட்டிவ் கவுன்சிலிலும், வைசிராய் எக்சிகியூட்டிவ் கவுன்சிலிலும், இந்தியா மந்திரிசபையிலும் இந்தியர்களை நியமிக்கவேண்டுமென்றும் இவ்விஷயத்தை இந்தியாமந்திரிக்குத் தெரிவிக்க வேடுமென்றும் வற்புறுத்துகின்றது. இத்தீர்மானம் சுதேசமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீ ஜி. சுப்பிரமணியய்யரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீ ஏ. ராஜமய்யரவர்களால் ஆமோதிக்கப்பட்டு தஞ்சாவூர் ஸ்ரீ வெங்கட்டராமய்யரவர்கள் முதலிய சபையாரால் ஆதரிக்கப்பட்டது.

IX

1891, 1892-ம் வருஷத்து இந்தியன் கவுன்சில் ஆக்டில் சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டு மென்றும், சென்னைசட்ட சபையிலும் இந்தியாமுழுமைக்குமுள்ள பெரியசட்டசபையிலும் சுதேசிகளுக்குள்ள செல்வாக்கை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்றும் அவற்றில் செய்யப்படும் தீர்மானங்களை சீர்திருத்தஞ்செய்து தங்கள் அபிப்பிராயங்களைக் கலந்துகொள்ளும்படி சுவதந்திரம் கொடுக்க வேண்டுமென்றும் சென்னை சட்டசபைக்கு ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதி தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்றும் இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் தொகை சபையின் மெம்பர்களுடைய மொத்தத் தொகையில் பாதிக்குக்குறையாமல் இருக்கவேண்டுமென்றும், பிரதிநிதிகள் தெரிந்தெடுப்பதற்காக இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகள் அவ்வளவு திருப்தியா

யில்லாதபடியால் ஜனங்களின் உண்மையான பிரதிநிதிகளே தெரிந்தெடுக்கப்படக்கூடிய விதத்தில் விதிகளைத் திருத்தவேண்டுமென்றும், இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சபையில் ஸ்தானம் வகிப்பதற்கு கவர்னர் வைசிராய்முதலியவர்களின் அநுமதி வேண்டுமென்ற கட்டாயம் இருக்கப்படாதென்றும் இச்சபை அபிப்பிராயப்படுகின்றது. இத்தீர்மானம் ஸ்ரீ சி. கருணாகரமேனவன் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீ டி. வி. வெங்கட்டராமய்யரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீ என். கே. ராமசாமி அய்யரவர்களால் ஆதரிக்கப்பட்டது. ஆனால் இந்தத்தீர்மானம் அவ்வளவு சரியாயில்லையென்று ஆனரபிள் ஸ்ரீ கே. ஆர் குருசாமி அய்யரவர்கள் சொல்லியதோடு இரண்டு ஜில்லாவுக்கொரு பிரதிநிதி வேண்டுமென்று கேட்பதுதான் நியாயமாகுமென்று திருத்தினார்கள். இவர்கள் கக்ஷியில் ஸ்ரீ ஆதிநாராயண அய்யரவர்களும், ஸ்ரீ ஜி. ஏ. நடேசனவர்களும் இன்னும் சிலரும்சேர்ந்தார்கள். ஸ்ரீ கருணாகரன்மேனவன் அவர்கள் கக்ஷியில் மகான் ஜி. சுப்பிரமணிய ஐயரவர்களும், ஸ்ரீ எஸ். கே. நாயர் அவர்களும் ஸ்ரீ என். கே. இராமசாமி ஐயரவர்களும் மற்றும் அநேகரும் சேர்ந்தார்கள். இவ்வாறு பெரியவாதம் உண்டாயிற்று. முடிவில் சபாநாயகர் அவர்கள் பிரதிநிதிகளின் சம்மதத்தைச கேட்டதில் ஸ்ரீ கருணாகரமேனவன் அவாகள் கக்ஷியே உறுதியாகி அவர்கள் முதலில் பிரேரேபித்த தீர்மானமே காயம் செய்யப்பட்டது. இதில் இரண்டு கக்ஷிகளுக்குள்ளும்நடந்த விவாதமானதுமிகவும் ஊக்கமாய்நடைபெற்றது.

X

இந்தியாவில் வைத்திருக்கும் சேனைகளின் போஷணைக்காகச் செலவு செய்யப்படும் தொகை மிகவும் அதிகமாகவும் அனாவசியமாகவும் தோன்றுகின்றபடியால் அதைக்கூடியவரை குறைக்கவேண்டுமென்றும் அதற்கனுகூலமாக, ஐரோப்பிய சோல்ஜர்களை அதிகமாய் வைத்திருப்பதை நிறுத்தி சுதேசிகளாகிய இந்திய சிப்பாய்களை இன்னும் அதிகமாய் நியமிக்கவேண்டுமென்றும், சேனையில் மற்றமாகாணங்களுக்குள்ள சுவதந்திரங்களைப்போலவே சென்னை மாகாணத்துக்கும் கொடுக்கவேண்டுமென்றும் இவ்விஷயத்தை இந்தியா மந்திரிக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும் இச்சபை தீர்மானிக்கின்றது. இத்தீர்

மானம் ஆனரபிள் ஸ்ரீ பி. நரசிம்மேசுர சர்மா அவர்களால் பிரேரே பிக்கப்பட்டு மிஸ்டர் பால் அப்பாசாமி யவர்களால் ஆமோதிக்கப்ப ட்டு ஸ்ரீ கே. ஜீ. கிருஷ்ணசாமியய்யரவர்கள் முதலியச்சபையாரால் ஆதரிக்கப்பட்டது.

XI

சபார்டினேட் ஜட்சாயிருந்திருப்பவர்களே ஜில்லா ஜட்ஜாக நியமி க்கவேண்டுமென்றும் ஜில்லாஜட்ஜுகளுக்கு அவ்வளவு அதிகமான சம்பளம் கொடுப்பது தகாதென்றும் தக்க சட்டப்பரீக்ஷையும் அநு பவமுமுள்ளவர்களையே சபார்டினேட் மாஜிஸ்திரேட்டுகளாய் நியமி க்கவேண்டுமென்றும் இச்சபை அபிப்பிராயப்படுகின்றது. இத் தீர்மானம் ஸ்ரீ பி. நாராயணய்யரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீ என் கிரு ஷ்ணமாசாரியாரவர்கள் முதலிய சபையாரால் ஆதரிக்கப்பட்டது.

XII

கவர்ன்மெண்டார் இப்பொழுது குளம்கால்வாய் முதலிய பாய்ச்சலாதாரங்களை விர்த்திசெய்யும்பொருட்டு ஏராளமானபணச்செலவு செய்வதற்காக மிகுந்த நன்றி பாராட்டுவதோடு இன்னும் குளங்களி லும் கால்களிலும் கிடக்கும் தூர்வைகளையும் அப்புறப்படுத்திப் போதுமானபடி தண்ணீர்ப் போக்குவரவுக்குரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் அதற்காக குடிகளிடம் வரி வாங்கப்படாதென்று ம், கிணறுவெட்டும் விஷயத்தில் கவர்ன்மெண்டார் குடிகளுக்கு தக்க யோசனைகளையும் வழிகளையும் காட்டிக் கொடுக்கவேண்டுமென்றும், கிணறுவெட்டுவதற்காகக் குடிகளுக்குக் கடன் கொடுத்து, அவ்வாறு கிணறு வெட்டிப் பலன்பெறாமல் குடிகள் நஷ்டப்பட்டுவிட்டால் அந்தத் தொகையின் ஒரு பாகத்தை வஜாச்செய்ய வேண்டுமென்றும், அந்தவகையான நஷ்டத்துக்குக் கவர்ன்மெண்டாரும் பாத்தியப்பட வேண்டுமென்றும், துங்கபத்திரா கிருஷ்ணா நதிகளின் தண்ணீர் ரிசர் வாயர் (கெப்பம்) விஷயமான வேலையைச்சீக்கிரம் தொடங்கும்படி க்கும் இச்சபை பிரார்த்திக்கின்றது. இத்தீர்மானம் ஸ்ரீ எம். வெங்க ட்டராமய்யரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீ எம். ஆர். இராமகிரு ஷ்ணய்யரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீ இராமலிங்க செட்டியாரவர்கள் முதலிய சபையாரால் ஆதரிக்கப்பட்டது.

XIII

திருநெல்வேலி ஜில்லாவில் இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிலத்தீர்வையே மிகவும் அதிகமாயிருப்பதால் இன்னும் அதிகமாக ஏற்படுத்தப்படாதென்றும் வேண்டிக்கொள்ளுகின்றது இத்தீர்மானம் ஸ்ரீ எம். ஆர். இராமகிருஷ்ணய்யரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு மிஸ்டர் சயித்ஜீயீபாசாகிப் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீ முத்துசாமி சாஸ்திரி அவர்கள் முதலிய சபையாரால் ஆதரிக்கப்பட்டது.

XIV

வருமானத்தீர்வை கொடுப்பவர்கள் தாங்கள் கொடுக்கும் தீர்வை அநீதியானதென்று ஆக்ஷேபித்தால் அதைக்கவர்ன்மெண்டார் கேட்டு அங்கீகரிக்கவேண்டுமென்றும் குடிகளுடைய வாக்குமூலத்தையும் அவர்களுடைய ரிக்கார்டுகளையும் கவனியாமல் தீர்வை ஏற்படுத்துவது கூடாதென்றும் தீர்மானிக்கின்றது. இத்தீர்மானம் மிஸ்டர் ஜே. டி. ஸ்ரீநிவாசம்பிள்ளை யவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீ வி. சி. சேஷாச்சாரியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீ ஏ. ஆர். கிருஷ்ணய்யரவர்கள் முதலியசபையாரால் ஆதரிக்கப்பட்டது.

XV

ஜில்லா போர்டுகளால் நியமிக்கப்படும் ஜில்லா எஞ்சினீர் உதவி எஞ்சினீர்கள் இந்த ஸ்தானத்திற்கு இந்தியர்களைப்பார்க்கினும் ஐரோப்பியரை விசேஷமாய் எடுப்பது கூடாதென்று தடுக்கின்றது. இத்தீர்மானம் ஸ்ரீ பி. சுப்பாராயர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீ எஸ். பழனியாண்டி முதலியாரவர்கள் முதலிய சபையார்களால் ஆதரிக்கப்பட்டது.

XVI

இப்பொழுது வங்காளத்தில் சா. பி. புல்லர் முதலிய அதிகாரிகள் செய்யும் அக்கிரமங்களைக் கூடிய சீக்கிரத்தில் நிறுத்தும்படி தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று வைசிராய்க்கும் இந்தியா மந்திரிக்கும் தெரிவிக்கவேண்டுமென்றே தீர்மானிக்கின்றது இது சபாநாயகர் ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி ஐயரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு எல்லாப் பிரதிநிதிகளாலும் மற்ற ஜனங்களாலும் ஆமோதித்து ஆதரிக்கப்பட்டது.

பத்திராதிபர்.

சென்னை சுதேசிய நிதியும், தொழிற்சங்கமும்.

(Industrial Association)

மேற்கண்ட சங்கத்தின் காரியதரிசிகள் அதனுடைய நோக்கம் முதலியவைகளை விளக்கியும் சுதேசிய நிதியைச்சேகரிக்கும் வழிகளைக் காட்டியும் நம்மவர்களுடைய சகாயத்தை வேண்டிப் பின்வருமாறு எழுதுகின்றனர். ஆங்கிலத்தில் எழுதினதைத் தமிழில் மொழி பெயர்த்துப் பதிப்பிக்கிறோம்.

சென்னைச் சுதேசிய நிதியின் அமைப்பும் நிருவாகமும் இப்பொழுது புதுமாதிரியாயும், சரியான அஸ்திபாரத்தின் பேரிலும், ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த நிதியின் நோக்கங்களும், இதனால் இன்ன இன்ன காரியங்கள் செய்யக்கூடுமென்பதும், ஆரம்பமுதற்கொண்டே பொதுவாக மெச்சப்பட்டு வந்தபோதிலும், இதின் உபயோகமும், விருத்தியாம்சமும், கேவலம் சிலரையே பொறுத்ததாயிராதபடி, இதைச்சேர்ந்தாற்போல், செல்வாக்குள்ள பல பெரிய மனுஷர்கூடி ஒரு சங்கமிருக்கவேண்டியது அவசியமென்று பலர் உணர்ந்தார்கள். இந்த உணர்ச்சியானது சென்ற டிசம்பர்மாசம் காசியில் காங்க்ரெஸ் கூடியபோது நடத்தப்பட்ட "இண்டஸ்டிரியல் கான்பரென்ஸி" ன் தீர்மானத்தின்பேரில், மிகுதியும் பலப்பட்டது, ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்த நிதிக்கு ஆதாரமாக ஒருதொழிற்சங்க மேற்படுத்தவேண்டியது இச்சென்னைராஜதானிக்கு இன்றியமையாததென்று காசிக்குப் போய்வந்த சில டெலிகேட்டுகள் மனதிற்பட்டது. ஆகவே, 1906-ம் வருஷம் மார்ச்சுமாதம் 4-ந்தேதி சுதேசிய நிதியின் சந்தாதாரர்கள் ஓர் பொதுக்கூட்டங்கூடி, "சென்னை சுதேசிய நிதியும் இண்டஸ்டிரியல் அஸோஸியேஷனும்" என்ற பெயருடன் ஒரு சங்கம், ஸ்தாபிக்கிறதென்றும், வேண்டியவரையில் மெம்பர்களைச் சேர்த்துக் கொள்ளுகிறதென்றும், சங்கத்தினுடைய நோக்கங்களுக்குத் தகுந்த சட்டதிட்டங்களை யேற்படுத்து

கிறதென்றும், தீர்மானித்தார்கள். அந்தத் தீர்மானத்தை அனுசரித்து, பின்வருகிற நோக்கங்களோடு ஒரு அஸோஸியேஷன் அல்லது சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது:—

1. நமது தேசத்தின் ஆதிகாலம்முதல் நடந்துவந்த கைத்தொழில்கள் அழிந்து மறைந்து போகாமல் நிலைநிறுத்தி விருத்திக்குக் கொண்டு வருவது.

2. பிரசங்கங்கள் செய்தல், துண்டுப்பத்திரிகைகள் பிரசுரஞ் செய்தல் முதலிய பல வழிகளாலும், ஜனங்களுக்குத் தொழிற்படிப்பு சம்பந்தமான அறிவைப் பரவச்செய்வது.

3. இந்தியாவிலும் இதர தேசங்களிலும், வாலிபர்கள்சென்று தொழிற் படிப்புப்பெறப்பண உதவிசெய்வது.

4. அப்படி அவர்கள் கற்றுவந்தவுடன் கற்றுவந்த தொழில்களை நடத்தும்படி மூலதனம் கொடுத்து தொழில் நடத்தச்செய்வதில் உதவி புரிவது.

5. இந்தியாதேசத்துக் கைத்தொழில், வியாபாரம் இவைகளைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டிய விபரங்களைச் சேகரித்துத் தெரிவித்தல்.

6. தேசத்தின் வியாபாரம், கைத்தொழில் இவைகள் விருத்தியாகும் விஷயமாய் இன்னும் என்னென்ன வழிகள் அப்போதைக்கப்போது தோற்றுகின்றனவோ அவைகளை அனுஷ்டித்தல்.

இந்த அஸோஸியேஷனின் மேற்சொன்ன நோக்கங்களை, வெளி நாடுகளில் இதைப்போலுள்ள இதர அஸோஸியேஷன்களைக் கலந்து கூடியவரையில் சரிவர நிறைவேற்றி வரவேண்டியது. 21 வயதிற்குக் குறையாத ஒவ்வொரு இந்தியரும் இதில் மெம்பராய்ச் சேரலாயக்குள்ளவர்களாவார். இந்த அஸோஸியேஷனில் ராஜாங்க சம்பந்தமான விஷயங்கள் அணுவளவுமில்லாமல், முற்றிலும், கைத்தொழில், வியாபாரம் இவைகளைக் குறித்தவானபடியினாலே, உத்தியோகஸ்தர்கள்கூட தாராளமாய் இதில் மெம்பர்களாய்ச் சேரலாம் இதில் மெம்பர்களாய்ச் சேருகிறவர்களுக்கு வருஷ சந்தா ரூபா 3.

இதை வருஷத்தில் இரண்டு தடவை முன்பணமாகவே செலுத்த வேண்டும்.

இதன் மானேஜிங் போர்டு, இரண்டு கமிட்டிகள் கொண்டதாயிருக்கவேண்டும்:—

I. விவரங்களைச் சேகரிக்கும் கமிட்டி.

II. சுதேசிய நிதி கமிட்டி.

விவரங்கள் சேகரிக்கும் கமிட்டியானது ஒரு செக்ரட்டேரியும் மானேஜிங் போர்டு மெம்பர்களில் நால்வருங் கொண்டதாயிருக்கவேண்டியது: அதன் முக்கிய கடமைகள்:—

(a) இந்தியக் கைத்தொழில், வியாபாரம் இவைகள் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும், விவரங்களை விசாரித்துச் சேகரம் செய்வது.

(b) நமது தேசத்துக் கைத்தொழில், வியாபாரம் இவைகளைப்பற்றிச் சொல்லும் புஸ்தகங்களடங்கிய ஓர் புஸ்தகசாலை வைத்து ஆதரித்தல்.

(c) அவைகளைப்பற்றிப் பேசும் வர்த்தமானப்பத்திரிகைகளையும் கவரன்மெண்டுப் பிரசுரங்களையும் தருவித்து வைத்தல்.

(d) அவைகள் சம்பந்தமாய், இந்தியாவிலும் இன்னும் உலகத்தில் பல பாகங்களிலுமுள்ள கைத்தொழில், வியாபாரம் இவைகளில் அனுபோகஸ்தர்களாகவும் தேர்ந்தவர்களாயுமுள்ளவர்களுடன் கடிதப்போக்கு வரத்துச் செய்தல்.

(e) கைத்தொழில், வியாபாரம் இவைகள் விஷயமாய் அக்கரைப்பட்டவர்கள் கேட்கும் கேள்விக்கு உத்தரம் வரைதல்.

(f) இவைகள் சம்பந்தமான பிரசுரங்களைச் செய்தல்.

(g) பிரசங்கங்கள் ஏற்படுத்தல்.

(h) இன்னும் அஸோஸியேஷனுடைய நோக்கங்களுக்குத் தக்கபடி வேண்டிய காரியங்களைச் செய்தல்.

சுதேசிய நிதியின் கமிட்டியானது, டிரஸ்டிகள், இரண்டு வைஸ் பிரஸிடெண்டுகள், போர்டிலுள்ள மெம்பர்களில் மூன்றுபெயர்கள்,

ஒரு செக்ரட்டெரி ஆகிய இவர்கள்டங்கியதாக விருக்கும், இந்தக் கமிட்டியின் முக்கியவேலை:— மானேஜிங் போர்டு, அஸோஸியேஷன் இவைகளின் அதிகாரத்துக்குட்பட்டு சுதேசிய நிதிக்குப்பணம் சேகரித்தலும், சேகரித்த தொகையை ஓரிடத்தில் போட்டுவைத்து வரவு செலவுகளுக்குக் கணக்கு வைத்தலும், இவைகளை யெல்லாம் சரிவரப் பார்த்து வருதலும், போர்டாரால் குறிப்பிடப்பட்ட ஒரு பாங்கியில், டிரஸ்டிகள் பேரால் இந்த நிதியானது போட்டுவைக்கப் பட வேண்டும். மானேஜிங் போர்டாருக்கு டிரஸ்டிகளெழுதிப் பெற்றுக்கொண்ட அநுமதியின்பேரில் இரண்டு டிரஸ்டிகளாலும், செக்ரட்டெரி ஒருவராலும், கையெழுத்துச் செய்யப்பட்ட செக்குகளால், பாங்கியிலிருந்து செலவுக்கு வாங்கப்படவேண்டும். டிரஸ்டிகள் சென்னைவாசிகளாயிருக்கவேண்டும்.

சுதேசிய நிதியானது பின்னால் சொல்லப்படுகிற விதங்களாக வசூல் செய்யப்படவேண்டும்:—

(a) பிரதி வருஷமும் தீபாவளி தினத்திலும், அல்லது சில விசேஷ தினங்களிலும், அல்லது இடங்களுக்குத் தக்கபடி வசதியான பண்டிகை தினங்களிலும், வீடு வீடாய்ச்சென்று அவரவர்மனமொப்பிக்கொடுக்கும் தொகையை வசூல் செய்தல்.

(b) சென்னையிலும் வெளி நாடுகளிலுமுள்ள கமிட்டிகளால் ஜமீன்தாரர்கள், ஸாவ்காரர்கள், தொழிலாளிகள், வர்த்தகர்கள், மடாதிபதிகள், மதாச்சாரியர்கள், தர்ம ஸ்தாபனங்கள் முதலியவைகளை வைத்து நடத்துபவர்கள், இவர்களிடமிருந்து வசூல் செய்தல்.

(c) ஜனங்கள் தாராளமாய்ப் பணச்செலவு செய்யும் விவாகம் முதலிய உற்சாக சமயங்களில் வசூல் செய்தல்.

(d) வியாபாரிகள், கடைக்காரர்கள் முதலியவர்களிடம் அவர்களுடைய வியாபாரத்தின் நிலைமைக்குத் தக்கபடி சுதேசிய நிதியின் அபிவிருத்திக்கென்று ஏதோ சில தொகை கொடுத்ததைப்பெறுதல்.

(e) இன்னும் மானேஜிங்போர்டு, நிதிக்கமிட்டி, இவர்களுக்குக் கப்போதைக்கப்போது யுக்தமாய்த்தோன்றும் வழிகளாலும்சேகரித்தல்.

மேலேகண்ட 2-வது ரூலில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களுக்கு இந்த நிதியானது செலவு செய்யப்படும்.

அப்படிச் செய்வதிலும், அஸோஸியேஷனுடைய நடைமுதல் செலவுக்காக, மெம்பர்கள் கொடுக்கும் சந்தாத் தொகையையும், நிதியில் கூடிவரும் வட்டித் தொகையையும் தவிர, அதிகத் தொகை செலவு செய்யப்படக் கூடாது. ஆனாலும் சமயோசிதமாக அஸோஸியேஷன் மெம்பர்கள் சேர்ந்து எப்படித் தீர்மானஞ்செய்து செலவிட்டாலும் செலவிடலாம்.

ஆகவே சுதேசிய நிதியானது, சாவதானமானதும், விசாலமானதும், பிரதிநிதி இயல்புடையதுமான அஸ்திவாரத்தின் பேரில் இப்போது ஸ்தாபிக்கப்பட்டாய்விட்டது. அது திறமையும் பயன் தரத்தக்கதுமான வழியில் நடத்தப்படுமென்பதற்குப் போதிய அத்தாட்சியாகவுமிருக்கின்றது. சென்னையில் கைத்தொழிலிலும், வியாபாரத்திலும் மிகுந்த வியாபகர்களான சில பிரதிநிதிகள், மானேஜிங் போர்டில் கவலையுடன் பொறுக்கிச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

ஏற்கனவே வசூலான தொகை யெந்த வழியில் உபயோகப்படுத்தப்பட்டது என்ற கேள்வியை அநேகர் கேட்கிறார்கள். அடுத்த வருஷம் தீபாவளிக்குத் தொகை வசூலிக்க நாம் மறுபடி போவதற்குள், நிதியின் நோக்கங்களுக்குத் தக்கபடி எதாவது ஒருநல்லவழியில் அது உபயோகப்படுத்தப்பட்டதென்று பொது ஜனங்களுக்குச்சொல்லுதல் அவசியமென்று கருதப்படுகிறது. சில்லறைச் செலவுகள் போக, இப்பொழுது நிதியில் 6,000-த்துச் சொச்சம் ரூபாவுக்குமேலில்லை. இந்தத்தொகையானது அஸோஸியேஷனால் பெரிய காரியங்களை மேற்கொண்டு செய்யப் போதாது. ஆயினும், கைவசமிப்பொழுதுள்ள சொற்பத் தொகையாகிய இந்த மூலதனத்தைக் கூடியவரையில் சரியான வழியில் உபயோகிக்கக்கருதி மானேஜிங் போர்டார் பின்வரும் ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள்:—தொழில் சாஸ்திர புஸ்தகங்கள் வாங்குவதற்காக 500 ரூபாய் வைக்கப்பட்டிருக்கிறது. நாளிது மாதக்கடைசியில் காஞ்சிபுரத்தில் நடக்கும் பொருட்காட்சிச் சந்தையில் மிகவும் திறமைபெற்ற இரண்டு நெசவுக்காரர்களுக்கு 100 ரூபாயில் ஒரு இனாமும், 50 ரூபாவில் ஒரு இனாமும் கொடுப்ப

தாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மதுரையில் நடந்த பொருட்காட்சியிலும் திருநெல்வேலியில் நடக்கப்போகிற பொருட் காட்சியிலும் இவ்வித வெகுமதிகள் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது இவ்விதமாய் இனாங்கள் கொடுப்பதின் கருத்தானது நெசவுத்தொழில் முதற்றரமான தறி எதுவென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்பது. இந்த ஆறு இனாங்களும் சேர்ந்து மொத்த ரூபா 450 ஆகிறது. நடைமுதல் செலவுக்கும் சொற்பத்தொகை வைக்கப்பட்டிருக்கிறது. பாக்கியிருக்கும் சுமார் 5000-த்துச் சொச்சம் ரூபாயும் டிரஸ்டிகள் பேரால் சென்னை அர்பத்னட் வகைக் கம்பெனியாரிடம் போட்டு வைக்கப்படும். இன்னும், சிறிய தொழில்களாகிய, ஸோப், பிஸ்கத்து, ஸைமண்டு (சிமிட்டி) இவைகள் செய்தல், பஞ்சு நூற்றல் நெய்தல், முதலியவைகளில் சில தக்கவர்களைத் தயார்ப்படுத்தவும் தொழிற் கல்வியை இதர தேசங்களிற் சென்று கற்றுவரும் கெட்டிக்காரத்தனமாய் முன்னுக்கு வரக்கூடிய பிள்ளைகளுக்குத் தற்காலம் பணத்துக்குத் தக்கபடி, உதவி செய்யலாமென்ற விஷயமும் யோசனையிலிருந்து வருகிறது. கைத்தறியைக் கொண்டு நெசவு நெய்யும் தொழில் மானேஜிங் போர்ட்டார் மிகுந்த சிரத்தையாய்க் கவனிக்கவேண்டிய விஷயம், ஏனென்றால், இந்த ராஜதானியில் விவசாயத்துக்கு அடுத்த படியில் மகா முக்கியமான தொழில் இந்த நெசவு வேலை ஒன்றுதான்.

ஆனால் தற்சமயம் கையிலிருக்கும் மூலதனத்தைக் கொண்டு
இப்பேர்ப்பட்ட பெரிய காரியங்கள் ஒன்றும் இப்பொழுது செய்ய
இடங்கொடுக்க மாட்டாது. ஆனால், இந்த ஆறாயிரத்தை விட்டுக்
கூடிய சீக்கிரத்தில் ஆறு லட்சமாகச் சுதேசிய நிதிக்குச் சந்தாக்
தொகைகளும் இனாங்களுமாக மூதல் வந்து பெருகிக்கொ
க்குமென்று நம்புகிறோம். ஏன் அறுபதுலட்சந்தான் சே
நம்முடைய தேசத்தார்கள் மட்டில் மனது வைக்
இந்தத் தொகையும் சுளுவில் சேர்ந்துவிடும், தீபாவளி
வீடு வீடாய்ச்சென்று வசூலிப்பதினாலேயே இந்தச்
கியமாய்ச் சேரவேண்டும். கிராமங்கள், பட்டணங்
த்தாலும் ராஜதானி முழுவதும் வசூல் செய்யப்

வகையில் மாத்திரம் பத்தாயிரக்கணக்காக தொகை சேரக்கூடுமல்லவா? இதுவன்றி வேறு பலவழிகளாயும், எவருக்கும் அதிக செலவாவது இம்சையாவதில்லாமல் தொகைவந்து குவியக் கூடுமென்பதில் சந்தேகமென்ன? இப்பேர்ப்பட்ட காரியங்களில் ஏழைகளாயிருப்பவர்களைவிடக் கொஞ்சம் பணக்காரர்களாயுள்ளவர்கள் தான் உதவி செய்ய முன்வர வேண்டும். வயிற்றுச் சோற்றுக்கில்லாமல் போன பிராணனும் போகாப் பிராணனுமாய்க் கண் கலங்கித் தவிக்கும் நமது தாய் நாட்டில் ஜனித்த லட்சக்கணக்கான ஏழை இந்தியர்களுக்கு உயிரைக் கொடுத்துச் சந்தோஷமாய்க் காலங் கழிக்கச்செய்யும்படியான இந்த உத்தம கைங்கிரியத்துக்கு ஜமீன்தார்களும், ஸ்ரீமான்களும், உத்தியோகஸ்தர்களும், மடாதிபதிகளும், காரிய தர்மகர்த்தர்களும், சமயம் நேரும்பொழுது அப்போதைக் கப்போதாவது அல்லது வருஷவாரி யாகவாவது தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்வார்களென்று நம்புகிறோம். சட்டப் பயிற்சி செய்து நியாயவாதம் நடத்தி வரும் கனவான்கள் (வக்கீல்கள்) தங்கள் தங்களிடம் ஏராளமான பணச்செலவுள்ளதாய் வரும் வியாஜ்ய வியவகாரங்களிலிருந்து இந்த நிதிக்குத் தொகை சேரும்படியான மார்க்கங்களையும் செய்யலாம். கலியாண காலங்களில் அனேக குடும்பத்தார்கள், ஏராளமான பணச்செலவு செய்கிறவர்கள். அந்தக் குதூகல காலங்களில் அவர்கள் ஆசாரிய சம்பாவனை, மடத்து சம்பாவனை, ராஜசம்பாவனை, யென்பவைபோல், சுதேசீய நிதி சம்பாவனையென்று எதாசக்தி பொருளுதவி செய்வது, அவர்களுக்கு ஒரு பெரிய சுமையாக மாட்டாது. இந்துஜன சமுகத்தாரின் உதவிக்காக ஏற்பட்டிருக்கும் சுதேசிய நிதிக்குச் சுபசோபனாதி காலங்களில் ஸம்பாவனை செய்வது மது இந்துஜன சமூகத்துக்கே உபசரித்துச் செய்த மரியாதையாகு து எல்லா வகுப்பாருக்கும் ஒத்தது தானே. கடைசி ஷயம் பாருங்கள்! அதாவது, நமது சென்னையிலும் வெ ுள்ள ஒவ்வொரு கடைக்காரரும் மாதம் ஒன்றுக்கு 6 கொடுக்கிறதென்று ஏற்பட்டால் இந்த ஒரு வழியினு திக்கு எவ்வளவு தொகை சேர்ந்துவிடும்! இப்படிப் ற்கு ஜனங்கள் சந்தேகமில்லாமல் கொடுப்பார்கள். ளுக்கும் தனவான்களுக்கும் கொடுக்க மனம் வரு

கிறதில்லை. மனமிருக்கும் ஏழைகளை நெருங்கி, விஷயங்களைச்சொல்லி, நிதியின் நோக்கங்களை யெடுத்துக்காட்டி ஏதோ அவர்கள் கொடுப்பதை கைநீட்டி வாங்குவதற்குத் தகுந்த மனுஷ்யாள் சேர்ந்தமைந்த ஏற்பாடில்லை. வருஷமெல்லாம் பசிப்பிணியால் வருந்துவதே நிலைமையாகக் கொண்ட லக்ஷக்கணக்கான நம் ஏழைகளின்மீது நம் தேசத்து எல்லா வகுப்போரும் தயவு பாராட்டி தம் தம் சக்திக்குத் தக்கபடி, இந்தப் புண்ணிய பூமியாகிய ஆரியாவர்த்த மாதாவின் பொருட்டு சிறிது தொகையேனும் சமர்ப்பித்துப் புண்ணியம் பெறுவார்களென்று நம்பி இப்படி வினயத்துடன் வேண்டிக்கொள்ளுகிறோம்.

"வந்தே மாதரம்"

ஜி. சுப்பிரமணியய்யர்
டி. வி. அனுமந்தராவ்.
செக்கிரிடேரிகள்.
சுதேசபரிபாலினி.

FEMALE EDUCATION IN JAPAN.

ஜப்பான் தேசத்தில் பெண் கல்வி.

பூர்வீகத்தில் அதாவது பௌத்த மதம் ஜப்பானில் ஸ்தாபனமாவதற்குமுன் ஸ்திரீகள் புருஷர்களைப் போல் எல்லா விஷயத்திலும் சுதந்தரம் பெற்றிருந்தார்கள். புருஷர்களுக்குள்ள எல்லா வித்ப்பாத்தியமும் அவர்களுக்கு மிருந்தன. பட்டத்துக்கு வந்து ராச்சியபரிபாலனம் பண்ண அனேக பெருமாட்டிகள் குதிரைகள் பேரில் சவாரி செய்வதும் வேட்டைக்குப் போவதுமல்லாமல் யுத்தத்தில் பிரவேசித்து சண்டைகளும்செய்துவந்தார்கள். இதுமாத்திரமல்ல காவியங்களும் கற்பனைகளும் அனேகமாய் செய்து புத்திகூர்மையுள்ளவர்களாக விருந்தார்கள். புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும், அடக்கம், சுசிகரம் பிடிவாதம் வாக்குவிசுவாசம், ராஜபக்தி முதலிய குணங்களை ஸ்தாபித

ப்படுத்தி வந்தார்கள். பௌத்தமதம் ஸ்தாபனமானபிறகு இக்குணங்கள் மேன்மேலும் விருத்தியடைந்தே வந்தன. தேசாபிமானம், ராஜவிசுவாசம், குழந்தைகளிடத்தில் அன்புதயாளத்துவம், ஏழைகள் பேரில் இரக்கம் முதலான பெருந்தன்மைகள் ஆதிமுதல் இவர்களுக்குப் பொருந்தியிருந்தன.

புருஷர்களைப்போலவே ஸ்திரீகளும் சுதந்தரம்பெற்று உல்லாசமாயிருக்க அனைவரும் அங்கீகரித்தார்கள். ஆனால் ஸ்திரீகள் புருஷர்களுடன் சமமாகவே கல்வியில் தேர்ந்தார்களாவென்பதைப் பார்க்குமளவில் புருஷர்கள் படிப்பிற்கும் பெண்கள் படிப்பிற்கும் வித்தியாசங்களிருந்தன. அதாவது புருஷர்கள் ஆத்தும தத்துவ சாஸ்திரம், நீதி சாஸ்திரம், கணித சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், பூகோள சாஸ்திரம், நாவிகேஷன் என்னும் கப்பல் யாத்திரையைப் பற்றிய சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களும் ஸ்திரீகள் மேல்சொல்லிய சாஸ்திரங்களில் முக்கியமாக கணித சாஸ்திரமும் வைத்திய சாஸ்திரமும் நீதி சாஸ்திரமும் கற்றதுடன் கூட குடித்தனத்துக்கு வேண்டிய முறைமைகளையும், தையல் வேலைகள். சாயவேலைகள் நெசவு வேலைகள் முதலிய கைத்தொழில்களையும் தேர்ச்சி யடைந்தார்கள். சமையலறை படுக்கையறை முதலிய அறைகளை சுத்தமாய்ப் பார்க்கவும், அலங்காரங்கள் செய்யவும், சிநேகிதர், விருந்தினர் முதலியவர்களை உபசரணை செய்து அவர்களுக்கேற்ற மரியாதைகள் அளித்து மஹா புத்திமான்கள் என்று பேரெடுத்தார்கள். சங்கீதத்தில் இவர்களுக்கிணை யானவர்கள், இல்லை யென்று சொல்லலாம். இவ்வித கல்விகள் பெண்கள் வீட்டிலிருந்து கொண்டே தாயாரிடத்திலும் பாட்டியாரிடத்திலும் கற்றுக்கொள்வது வழக்கமே யல்லாமல் புருஷர்களைப் போல் பள்ளிக்கூடங்களுக்குப் போய் கற்பது வழக்கமில்லை. ஒருவனுக்கு இரண்டு அல்லது மூன்று மனையாட்டிகள் விவாகம் செய்து கொண்டால் இவர்களுக்குள் இருக்கும் ஒற்றுமையும், விசுவாசமும் வெகு அற்புதமாயிருக்கும். ஒருவருக்கொருவர் பொறாமை, கோபம், கபடம் என்பது கிஞ்சித்தேனும் கிடையாது. புருஷனும் பெண்ஜாதியும் இணைபிரியா விசுவாசமும் ஒற்றுமையு முள்ளவர்களாகவே யிருக்

கிறார்கள். ஆடுவதும் பாடுவது முதலான விளையாட்டுகளில் விருப்பமுடையவர்கள். மிகவும் தேர்ச்சி யடைந்தவர்கள். ரணவீரர்களுடைய புத்திரிகள் கத்தியெடுத்துச் சண்டை செய்யப் பழகி வருகிறார்கள். சதாகாலமும் கையில் ஒரு கட்டாரி இருந்து கொண்டேயிருக்கும் சத்துருக்களை யெதிர்த்துப் போர் செய்வதற்கும் தங்களுக்கு மானபங்கம் வருந் தறுவாயில் தங்களையே உயிர் மாய்த்துக் கொள்வதற்கும் அவர்களுக்கு இது முக்கியமான கருவி. வெளியில் போகாமல் தாய்மார்களிடத்தில் பழகி, மனோதைரியமும் பதிவிரதாத் தன்மையும் பெற்றிருப்பது தங்கள் புருஷர்களின் கீர்த்திக்காகவே யொழிய வேறில்லை. இவ்விதச் செய்கைகள் சில பேர்களிடத்தில் மாத்திர மென்றெண்ண வேண்டாம். தாழ்ந்தவர்கள் முதல் உயர்ந்தவர்கள் வரையிலும் இவ்விதமாகவே யிருக்கும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. நம்மவர்களைப்போல் பெண்களுக்குக் கல்வி கற்பித்தால் விவாகமானவுடன் அகங்காரங் கொண்டு புருஷர்களை லக்ஷியம் செய்யார்கள் என்னும் எண்ணம் அவர்களிடத்தில் கிஞ்சித்தேனும் கிடையாது. சிறு பிராயங்களில் அவர்கள் தேர்ச்சியடைவது முதலில் மாமனாருக்கும், கணவனுக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் கீழ்படிந்து நடத்தல். இரண்டாவது மனச் சாட்சிக்கு விரோத மில்லாமல் ஒரு காரியம் செய்தல், பொய்பேசாதிருத்தல் பரிசுத்தம், குளிர்ந்தமுகம் முதலியவைகளும் மூன்றாவது அகங்காரம் பொறாமை, அயலாரிடத்தில் வெறுப்பு முதலிய துர்க்குணங்களை நீக்குதல் முதலியவைகளாம். இப்பொழுது அவ்விடத்தில் ஒவ்வொரு ஊரிலும் இரண்டு அல்லது மூன்று பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டுப் போயின. ஏழு வயதானவுடன் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப வேண்டு மென்று சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சாதாரண பள்ளிக்கூடங்களில் ஜப்பான் பாஷை எழுதவும் படிக்கவும், கணக்கு சரித்திரம் கற்பிப்பதுடன் கூட இங்கிலீஷும் கற்பித்து வருகிறார்கள். புருஷர்களைப் போல் பெண்களும் பெரிய பரீட்சைகளில் தேர்ந்து வருகிறார்கள். டொகியோவில் பெண்கள் சர்வகலா சாலை (University) ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. அங்கங்கேபெண் சங்கங்கள் ஏற்பட்டுவிட்டன. மற்றவைகளில் இவர்களுக்கு பிரியம் இருந்தாலும் இல்லாமற் போனாலும், தேசாபிமானமும், ராஜவிசுவாசமும் ஆதிமுதல் அந்தம் வரையில் நீங்காத விஷயமானதால் இவர்கள் மஹாகீர்த்திபெற்று எவ்வித முயற்சியிலும் தளராமல் வெற்றிபெற்று வருகிறார்கள் என்பதற்கு ஐயமில்லை. இந்தியா.

* ஈயாதவனும் இருநிதிக்கிழவனும்.

கனவேகத்துடன் காற்றடித் திடலுமே
சாளரக்கதவு சல சல வென்றது.
நுணுக்குற உலுத்தன் துயிலொழிந் தெழுந்தனன்.
அரவம் யாவும் அடங்கிய அறையினில்
அங்கும் இங்கும் அவன் அலைந்திடுவன்.
திரும்பிப் பார்ப்பன் திடுக்குற நடப்பன்.
பூட்டுச் சார்த் தெலாம் போய்ப் பரீக்ஷிப்பன்.
இடுக்கு முடுக்கெலாம் எட்டிப் பார்ப்பன்.
திரவியப் பேழையைத் திறந்தவன் பார்ப்பன்.
பணத்திரள் நோக்கிப் பரவசப்படுவன்.
ஆயினும் சடுதியில் அவன் மனம் சுறுக்கெனக்
கையைப் பிசைந்து மெய் அறைந்திடுவன்
மறச் செயற்றுயரால் மனம் பதை பதைத்திடக்
குற்ற நெஞ் சினன் இவை கூறலுற்றனனே:—
“ஆழ்புவி மட்டும் அதன் நிதி யாவையும்
அடக்கி உள்ள தாயின் இம் மனத்தினுக்
கினியதாம் அமைதி இருந்தே இருக்குமே
நல்லறம் விலைப்படும் நற்றெய் வங்காள்!
தீச்செய லால் வரும் தீரா வேதனைக்
கெத்துணை பணம் தான் ஈடதாகும்!!
நன்மைக் கெல்லாம் நாசகாரணமே!
வன்னெறிக் குய்த்திடும் வஞ்சகப் பொருளே!

---

* இது John Gay என்னும் ஆங்கில மகா கவி இயற்றிய கட்டுக்கதைகளுள் ஒன்றாகிய “Miser and Plutus” என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பு.

மனிதன்,—கேவலம் மனவலி யில்லா
மானிடன்-நின்வலி வெல்லவும் வல்லனே?
மன்த்தி னின்றும் மானத்தை ஓட்டிப்
பெயரை மட்டுமே பின் விடுத் ததுபொன்.
பூமியிற் பல் வகைத் தீமையும் விதைத்ததும்
பொன்னே யன்றோ? பின்னும் கொலைஞனின்
கத்திக் குக் கொலை கற்பித் ததும் பொன்.
பயங்கா ளிக்குப் படுபா வச் செயல்
பயிற்று வித்ததும் பணமே யாகும்.
செல்வம் செய்யும் தீமைகள் யாவையும்
எடுத்துச் சொல்ல யாரால் இயலும்?
அறநெறி யே இனி அவனியில் இலை'' எனப்
பேசி முடித்துப் பெருமூச்செறிந்தனன்—
முனி முகத்துடனவன் முன்னே நின்றனன்,
அவனுடைப் புத்தே ளாகிய புளூட்டஸ்.
பிசினன், திகலுறப்பேழையைப் பூட்டினன்;
முகத்தைச்சுளித்து மொழிந்ததவ் வுருவம்:—

" பணத்தாசை யுள்ள பாதகர் தினஞ் சொலும்
கள்ள ஞானக் கட்டுரை யாகுமிவ்
விசுவா சமிலா வெற்றுரை யாண்டது?
கயவனுகிய கடை கெட்டவனே!
மானிடர் தம்மை யாஞே கெடுத்தவன்?
கொள்ளைக் குணம் குடி கொண்டுள நின்னுடை
மனத்தில் அன்றோ உள்ளது மாசு. நான்
ஈவன தீவழிக் கிறைத்த தன்றியு மெனைக்
குற்றம் பழி வசை கூறவும் வேண்டுமோ?

காரியம் முடிந்திடக் காதகர் தாமும்
நல்லவர் போன்றே நடித்துக் காட்டுவர்.
அதிகாரம் வஞ்சி அவர்கைப் படுமேல்
குரூரமும் மிக்க கொடுமையும் பெருகும்:
தீயோன் பேழையில் திணித்து வைப்பின்,நிதி
அவன் மனம் அரித்திடும் அழிபுண் ணுகும். அஃதே
தர்த்தா பேட்சையும் அகந்தையும் குறும்பும்
திடுக்கிடச் செயும் பல தீமையும் ஆகும்.
நல்லோர் கைக்கது நல்கப்படினே
விண்ணி னின்றும் வீழ்பனி போன்றே
இன்னலம் பயக்கும். இறைவனே போன்று
தாய்தந்தையரிலாச் சேய்க்குறை தவிர்த்திடும்.
கைம்பெண்ணுடைய கண்ணீர் துடைத்திடும்.
உலோபத்தனமுள உயிரையே பணத்திற்
கொற்றி வைத்திடும் உலுத்தர் பொன் மேல்
தம்பிழை சாட்டுதல் சரியோ? சரியேல்,
இரத்தம் சிந்துழி இரண பாதகர்கள்
செயுலறு கத்தியைச் செய்பழிக் கெல்லாம்
குற்றஞ் சாட்டிக் கூறலும் சரி" என,

M. கோபாலகிருஷ்ணையர்,
அக்கிராசனாதிபதி 'மாணவர் செந்தமிழ்ச்சங்கம்'
&
Asst. Tamil Pandit, Madura College, Madura,

உ

சிவமயம்.

இந்திய மன்னிறை முடிசூட்டு வாழ்த்துப்பா.

இப்பெயரிய நூலொன்று அதை யியற்றிய தமிழ்ப்பிரம சூத்திராசிரியராகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமி, விருதை. சிவஞானயோகிகளாலனுப்பப்பட்டு வந்ததை அன்புடன் பெற்றோம். அது 403 அடிகளுள்ள அகவற்பாவாலமைந்த தனித்தமிழ் நூல். அதிற் பல அரிய விடயங்கள் கூறப்பட்டுள. அவற்றிற் சிலவற்றை ஈண்டெடுத்துக் கூறுவாம்.

கடவுள் என்ற பகுதியில் கடவுளின் உண்மையும் வன்மையும், இலந்தன் என்ற பகுதியில் இலந்தன் பட்டினச்சிறப்பும், விரிக்கப்பட்டுள. இப்பகுதியில் (48) வியமிகு மக்களியற்கும் விரிந்த, பூவுலகியற்கும் பூணத்தக்க, தாவரு மேன்மைத் தனிவளத் தொகைக்கும்; தன்னில மாகலி னிலந்தன் னெனுமியற், கொன்பெயர் புனைந்த கோப்பதி என்று இலந்தன் என்ற சொல்லை முன்றில், மீகண் என்பனபோல மொழிநிலைமாற்றாக வைத்துத் தமிழ்ச் சொல்லாக்கி வழங்கினமை கொண்டாடத்தக்கதே.

எட்டுவாரட்டு மன்னிறை என்ற பகுதியில் ஏழாவது எட்டுவாரட்டுச் சக்கரவர்த்தியின் பெருமையும் தன்மையும், விளக்கப்பட்டுள. அதில் (7) ஒன்றி-மதித் தன்படைவார் மண வட்டாதலின், "எட்டுவாரட்டெனுமெழிற்பெயரோடு, மட்டில் பற்பல மன்னர்கள் காத்த, தொன்மை யிந்து நாட்டில் மன்னிறை, யென்றரசாண்ட வினியவாண் டகையர், நவிலரிச்சந்திரன் னளன்முசு குந்தன், புருகுற்சன் புரூரவன் கார்த்தவீரியன், மட்டிலறவர் அவர்பின் வரலால், எட்டுவா, ரட்டேழாமவனென்ற, தன்மையு முரிமையுந் தானே விளக்கும் நன்மைப் பெயர்புனை நனிப்புகழ்த் தோன்றல்"

என்று எட்டுவார் அட்டு—தன்னை அடைவார்க்குக் கருப்புக்கட்டி போல் இனியன் என்று சக்கரவர்த்தியின் பெயரைத் தமிழ் மொழியாக வைத்துப் பொருள்கூறி இந்திய நாட்டையாண்ட சக்கரவர்த்திகளில் இவர் ஏழாமவர் ஆதலால் ஏழாமவர் (Seventh) என்று காரணங்கூறியதுங் கவனிக்கத்தக்கதே.

அரிது என்ற பகுதியில் மாக்களால் அடைதற்கரிய நலமெல்லா மெடுத்துக் கூறிச் சக்கரவர்த்தி அவையனைத்தும் உடையானெனல் கூறப் பட்டது. அதில் (153) "சொற்றவையுறினும் சூழ்நீருலகத் துற்ற புன்னெறி க்குப்பைக் கெரியும், நன்னெறிப் பயிரை நாட்டி வளர்த்தற், கின்னியன் மாரியும் உலகிலெவர்க்கும், எத்தகைத் திருவு மெத்தகை யின்பும், எத் கைவிறலும் எத்தகைப் பேறும், அளிக்கும் புத்தேண் மரமு மனைய, அளக் கருங் கடவுட்கன்புறல் அரிது, கடவுளன்புறினுந் தடமில் சிறிய, நாடா ளரயரும் நீடாக்குறும்பரும், ஆட்சியில் வேளிருந் தாட்சித்தொழும்பரும், தத்தந் திருவே மெத்த மேலென்று, செருக்குரு நிற்ப வொருக்கிப் பூவை, தன் கீழ்ப்படுத்து மங்கலத்திண்மை உற்றுத் தனிக்கோல் பெற்றுமிக் கோங் கியும் செல்லுழிச் செருக்கா நல்ல வருமை அரிதினும் மரிதிவ் வினைத்தினு மரிதே"

என்று கடவுளன்பும், (131) ஓரம் அகத்தியையாத அழகும்,

என்று, தம்மவர் அயலவர் னொதுமலர் என்ற பக்ஷபாதமின்மையே அரசர்க்கு எவற்றினும் சிறந்த அழகு என ஓரமின்மையும் வியந்தோதப் பட்டன.

இந்தியா என்ற பகுதியில் இந்திய நாட்டின் பெருமையும் (191.) "யார்க்கும், நற்பொது நெறிநூல் நவின்ற வள்ளுவர்" "முறைசெய்து காப் பாற்று மன்னவன் மக்கட், கிறையென்று வைக்கப்படும்" என்றிசைத்தலிற், கோனுயிர் காண்டே குடியுடல் தொண்டர், ஆனவரெனுந் தீர்ப் பகக்கண் ணெய்தி, உயிர்செழிக் கீச்செழி யுடலெனப் புத்தேள், அயின் மனப்படி செய் யடியரெனக்கோன், உவப்பவொழுகு மகிழ்ச்சியின் மகிழ்ந்தொண் ணெணத்தொடு மியைந்து பணிப்படி பணிந்து, வழுத்து மினிய விழுத்தகை யுடைய, பெருந்திரு மக்கள் பொருந்துநற் சீரது" என்று இந்தியரின் இரா ஜபக்தியும் வியந்தோதப்பட்டுளது.

மொழி யென்ற பகுப்பில் ("203") வியமிகு மொழிகளுள் மீசெவை தூய்மை, நயமிகு தொன்மையின் நன்கு சிறந்தன, வடசொற்றென்சொ லென்பன வடசொல், தடத்தது முதனிலை தனில்நூற் பன்மையில், தென் சொற்பாவில் தெளிமுத னிலையில், நன்னடு நூலில் நவையில்பா திணையில் ஒலியுமெழுத்து மொற்றுமை வினைத்தெளி வுலகவழக்கி லுயிர்த்தல் இய லொலி சொற்றொட ரழகினின் முற்றுமினியது,,

என்று உயர்தனிச் செம்மொழி (Classical Languages) களிற் சிற ந்த வடசொற் றென்சொற்களின் பெருமை கூறப்பட்டுளது.

தமிழின் உயர்வு.

---

(207) "பாவில்" தமிழ், எதுகை, மோனை, ஓசை இன்றியமையாதனவும் தளையிற் சிறந்தனவுமாகிய பாக்களையுடையது. வடமொழி லத்தின் கிரேக்கு முதலிய பாடைப்பாக்கள் அங்ஙனஞ் சிறந்தனவல்ல. ஆதலால் பாவில் இனியது.

தெளிமுதனிலையில் ஒரு பகுதியினின்று பிறந்தவினைச்சொற்கள் காலம் இடம் பால் பற்றி எவ்வித இடைநிலை விகுதி சாரியை முதலியன புணர்ந்து வடிவ வேற்றுமையடையினும், விகாரங்களையடையினும், அவ்வினைச் சொற்றோன்றிய பகுதியைக் காண்ட்ப்பதற்கு அப்பகுதி வடிவ மிருத்தல்வேண்டும். தமிழில் பகுதி விகாரப்படினும் முற்றும் மாறாது நிற்கும். ஓரெழுத்துப் பகுதிகளும் ஓரெழுத்தோடு மெய்புணர் பகுதிகளுமே மிக்குள்ளன பிற பாடைகளில் வினைப்பகுதிகள் இயல்பாலும் கால இடங்களாலும் பகுதி வடிவத்துக்குச் சம்பந்தமில்லாத வடிவ மடைகின்றன.

தமிழ்: வெல்—வெல்கின்றான், வெல்வான், வென்றான், வெற்றி.
பா—பாத்தான், பாகம், பால், பகு, பகை பகுத்தான், பகுதி,
அறு—அறுத்தான், அற்றான், அறுப்பான், அறுப்பு, அறை, அறுவை.

சமஸ்கிருதத்தில்.

பரஸ்மைபதி. பகுதி, அஸ், = இரு.

அஸ்தி	ஸ்த	ஸந்தி	எதி
இருக்கின்றான்	இரண்டுபெயர் இருக்கின்றார்	இருக்கின்றார்கள்	இரு

ஆத்மனேபதீ

ஹே	ஸே	ஸ்தே	த்வம்
இருக்கின்றேன்	இரண்டுபெயர் இருக்கின்றனர்	இருக்கின்றார்கள்	இருப்பீர்களாக
ஈய	ஈதாஸ்	ஈத	
இருப்பேனாக	இருப்பாயாக	இருப்பானாக	
பபூவ	பவிதா	பவிஷ்யதி	
இருந்தான்	இருப்பான்	இருப்பான்	

பகுதி—ஹன்—கொல்.

ஹந்தி	ஹம்வி	ஹந்தி
கொல்கின்றேன்	கொல்கின்ருய்	கொல்கின்ருன்
ஹத	க்நந்தி	ஜஹி
இருபேர் கொல்கின்ருர்	கொல்கின்றனர்	கொல்வாயாக

இவை முதலியவற்றிற் காண்க.

தற்கால இங்கிலீஷில் அத்தகை வேறுபாடு மிகக்குறைந்துளது.

Work	wrought	
Be	am } is }	was wast
	are, art	were wert

பழைய இங்கிலீஷில்.

O. E.	Lose	lost	lost, lorn or Forlorn
	Dael-an	dael-de	jedael, ed

208. நன்னடு நூலில்.

நடுநூல்—நீதிநூல்— மனிதரனைவருக்கும் ஒருவர் மற்றொருவரின் உடல் பொருள் மனங்களுக்கு ஊறின்றி நடந்துகொள்ளும் வழிகூறும்நூல் இனம் பற்றி ஞாயம் பிறழ்ந்து நடக்கும் நடக்கையைக் கூறுவதன்று. அது குறள், நன்னெறி, நல்வழி, நீதிநெறிவிளக்கம், இன்னாநாற்பது, இனியவை நாற்பது, நாலடியார், நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் முதலிய தமிழ் நூல்களிற் காணலாம்.

குறள் (118)—சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

(குறள் 315)—அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.

ஆதலால் நன்னடு நூலில்—முற்றுமினியது என்று விசேடிக்கப்பட்டது.

வடமொழியில் தருமசாஸ்திரங்களென்ற மிருதிகளில் குற்றங்களுக்குத்தண்டனை இனம் பற்றி ஒரமாய் விதித்துளது, நன்மைதரு மார்க்கங்களைக் கூறலிலும் ஒரம் உளது.

208. நவையில் பாறிணையில்.

தமிழ் மொழியில் எல்லாப் பொருள்களும் இரண்டு திணைகளாகப் பகுக்கப்பட்டுள. பகுத்தறிவுடைய உயிர்களை உயர்திணையாகப் பகுத்து, உயர்திணையில் ஆணுக்கு ஆண்பாலும், பெண்ணுக்குப் பெண்பாலும், பலருக்குப் பலர்பாலும், பகுத்தறி வற்ற விலங்கு, பறவை, நீர்வாழ்வன முதலியவுயிர்களையும் மரம், கொடி, செடி, கல் மண்முதலிய ஜடப்பொருள்களையும் அஃறிணையாகப் பகுத்து அவற்றுள் ஒன்றுக்கு ஒன்றன்பாலும், பலவற்றுக்குப் பலவின்பாலும் கூறப்படுகின்றன. தமிழில் விலங்கு, பறவை, மீன்களின் ஆண்பெண்களுக்கும் வெவ்வேறு பெயர் கூறப்படினும் அவைகள் பகுத்தறிவற்ற தாழ்ந்த ஜாதியிற் பட்டனவாதலால் அஃறிணையாகவே கூறப்படுகின்றன. ஆங்கிலம் முதலிய பாடைகளில் சில அஃறிணை உயிர்களுக்கும், பொருள்களுக்கும் ஆண்பால் பெண்பால் கூறினும் அங்ஙனங் கூறப்பட்ட வொன்றையே பலபால்களில் கூறுவதும், உயர்திணை ஆண்பாலுக்குப் பெண்பாற் பெயரும், பெண்பாலுக்கு ஆண்பால் ஒன்றன்பாற் பெயரும் முறைபிறழ்ந்து கூறுவது மில்லை.

வடமொழியில் பால் வரம்பின்றிப் பலவாறு கூறுவதுண்டு. அவை வருமாறு.

மனைவி பேயர்—

பார்யா—பெண்பால் (ஒருமை)
தாரா:—ஆண்பால் (என்றும் பன்மை)
களத்ரம்—ஒன்றன் பால்.

கல்லின் பேயர்—

பாஷாண:—ஆண்பால்
சிலா:—பெண்பால்
உபலம்—ஒன்றன் பால்.

ஆதலால் நவையில் பாறிணையில் இனியதுஎன்று தமிழ்மொழி விசேடிக்கப்பட்டது.

209. ஒலியு மெழுத்து மொற்றுமை.

ஒரு பாடையிலுள்ள சொற்களி னொலிகளை வரிவடிவிற் காண்பித்தற்கு இன்றிமையாத கருவியாயுளது எழுத்து. அங்ஙனமே தமிழ் மொழியின் ஒலியும் அதற்குரிய எழுத்தும் ஒற்றுமை பெற்றுளது. வேறு சில பாடைகளைப்போல் அவையொன்றுக்கொன்று வேற்றுமை யுடையனவல்ல.

வேறு பாடைகளில் வேற்றுமையுளது அதுவருமாறு.

இங்கிலீஷில்	Thot	என்ற ஒலிக்கு	Thought	என்றும்
	Clim	,,	Climb	,,
	Rendevoo	,,	Rendezvous	,,
	Indite	,,	Indict	,,
	Shenong	,,	Chingnon	,,
	Reset	,,	Receipt	,,
	Kurnel	,,	Colonel	,,
	Det	,,	Debt	,,

வருதல் முதலியன

சம்ஸ்கிருதத்தில்.

ப்ரஹ்ம	என்றெழுதி	ப்ரம்ஹ	என்றொலிக்கின்றனர்
சிஹ்ம	,,	சிம்ஹ	,, ,,
வஹ்நி:	,,	வங்ஹி:	,, ,,
விஜ்ஞானம்	,,	விக்ஞானம்	,, ,,

விசர்க்கம்ஃ—ha, ஜிஹ்வாமூலியம் ஹ்க—hka, உபத்மானீயம்—f, என்ற மூன்றெழுத்துகளுக்கும் விசர்க்கம் ஒன்றையே எழுதியொலிக்கின்றனர்.

உதாரணம்,

துஃக்கம்	என்றெழுதி	துஹ்க்கம்	என்றொலிக்கின்றனர்
அதஃபரம்	,,	அதfபரம்	,,
அந்தஃகரணம்	,,	அந்தஹ்கரணம்	,,

209. வினைத்தெளிவு.

வினைச்சொல் ஒருவன், ஒருத்தி அல்லது ஒன்றின் செயலைக் குறிக்குஞ்சொல். தமிழ் மொழி வினைகள் அவற்றைத் தெளிவுறக் குறிக்கின்றன பிறபல மொழிகளிலுள்ள வினைச்சொற்கள் ஆண் பெண், ஒன்றன்பால்களின் வேறுபாட்டை விளக்குகின்றில.

	ஆங்கிலம்	சமஸ்கிருதம்
செல்கின்றான்	(He) goes	(ஸ) கச்சதி
செல்கின்றாள்	(She) goes	(ஸா) கச்சதி
செல்கின்றது	(It) goes	(தத்) கச்சதி

	ஆங்கிலம்	இலத்தீன்
நேசிக்கின்றான்	(He) loves	(Ille) amat
நேசிக்கின்றாள்	(She) loves	(Illa) amat
நேசிக்கிறது	(It) loves	(Illud) amat.

210. இயலொலி.

(க ச ட த ப) முதலிய எழுத்துக்களுக்கு இயல்பிலுண்டாம் ஒலியுளது. வடமொழி முதலிய ஏனைய பாடைகளில் இவ்வொவ்வொரு இனத்திலு மிகுத்து மூன்று ஒலிகளை முயன்றொலிக்கக் கற்பித்துண்மை காண்க.

211. சொற்றொடரழகு.

சொற்றொடர்—வாக்கியம் அது எழுவாய், பயனிலை அல்லது செயப்படு பொருளுங்கூடி ஒரு கருத்தை விளக்குவது. அவற்றோடு அவற்றினுரிச்சொற்களும் இடைப்பிற வரலாய் வரும் வாக்கியங்களுஞ் சேர்ந்து குழூஉச்சொற்றொடராயும் வரும். பெயர்வினைகளின் இயலை உரிச்சொற்களானும் பல பெயர்களை இடைச்சொல்லானும், பலவினைகளை எச்சத்தானும், பெயர் பெயர்க்கும் வினைக்கும் சம்பந்தத்தை வேற்றுமையுருபானும், புணர்த்தி விளக்கப்படுகின்றது. ஆங்கிலத்தினும் தமிழ் போல சொற்றொடர் உளது.

சம்ஸ்கிருதம், லத்தீன், கிரீக்கு முதலிய பாஷைகளில் அங்ஙனம் அழகு பெறாது விசேஷணங்களுக்கும் அவை தழுவும் பெயர்களின் வேற்றுமை பால்களையேற்றல், இடைச்சொல்லன்றிக் கூறல் முதலிய அழகின்மைகள் உள.

கரியபெரிய குயிலை வஞ்சகமுடைய காக்கையாக எண்ணினான்
க்ருஷ்ணம் ப்ரஹந்தம் வஞ்சகிநம் காகம் பேனே

கரியதை பெரியதை குயிலை வஞ்சகமுடையதை காக்கையை எண்ணினான்.

மதுரையிலிருக்கும் இராமன் மகன் புலவனாகிய சுமுகனான இலக்குமணனால் இது எழுதப்பட்டது.

மதுரா வாசிநா, ராமபுத்ரேண, பண்டிதேந சுமுகேந, லக்ஷ்மணேந இயம் விக்யதே.

மதுரையில் வசிப்பவனால் இராமன் புத்திரனால் புலவனால் சுமுகனால் லட்சுமணனால் இது எழுதப்பட்டது.

சீனாபாடை.

Kou chi shi jin sse,
நாய் பன்றி தின் மனிதன் உணவு

பொருள் நாய்களும் பன்றிகளும் மனிதனின் உணவைத் தின்கின்றன

இலத்தின்

Deus dixit homini : utere fructibus omnium arborum paradise praeter fructum arboris scientiae boni et mali ; nam si comedas ex illo fructu , morieris

(சரியான மொழிப்பெயர்ப்பு) கடவுள் மனிதனிடம் சொன்னதாவது, தோட்டத்தினுடைய எல்லா வற்றினுடைய மரங்களினுடைய கனிகளைப்புசிக்கலாம். ஆனால் நன்மையுடைய தீமையுடைய அறிவையுடைய மரத்தினுடைய கனியைப் புசிக்கலாகாது. அப்படி அக்கனியைப் புசித்தால் நீ இறந்து விடுவாய்.

[கருத்து] கடவுள் மனிதனிடம் சொன்னதாவது:—தோட்டத்திலுள்ள எல்லா மரங்களின் கனிகளையும் புசிக்கலாம் ஆனால் நன்மை தீமையறியக்கூடிய மரத்தின் கனியைப் புசிக்கக்கூடாது. அப்படி அக்கனியைப் புசித்தால் நீ இறந்து விடுவாய்.

ஜூலுப்பாடை (*Zulu*)

"u—bu,—kosi bu,—etu o—bu,—kulu bu,—ya—bonakalasi-bu,—tanda"

(கருத்து) நமது பெரிய ராஜ்ஜியம் தோன்றுகின்றது நாம் அதை சிநேகிக்கின்றோம்.

இவண் u—bu (யு—பியூ) என்ற பதத்திலுள்ள பியூ ஒவ்வொரு சொல்லோடு சேர்த்துக்கூறப்படுகிறது

(சரியான மொழிப்பெயர்ப்பு) ராஜ்ஜியும், நமதுயம், பெரியயம், தோன்றுகின்றதுயம், நாம் அதை சிநேகிக்கின்றோம்யம்.

இந்த வாக்கியம் ராஜ்ஜியத்தைப் பற்றியதாதலால் ராஜ்ஜியம் என்ற பதத்திலுள்ள யம் அதன் சம்பந்தமான ஒவ்வொரு சொல்லோடும் சேர்த்துக்கூறல் வழக்கம்.

(Anthropology by E. B. Tylor Page No. 149)

ஹாட்டன்டாட் [Hottentot] பாடை, காத்திக் [Gothic] முதலிய பாடைகளிலும் பயனின்றி விசேடண முதலியன மறித்து மறித்துக் கூறலுண்டு.

இவ்வாறு பற்பல விஷயங்களிலும் ஆழ்ந்த கருத்துக் கொண்டு இந்நூலாசிரியர் தமது பூரண சாமர்த்தியத்தையும் காட்டியுள்ளார்கள். இச்சிறுநூலை ஊன்றிய மனத்துடன் உற்றுநோக்கினால் அநேக நயங்கள் வெளிப்படக் காணலாம். அன்றியும் தனித்தமிழ் மொழிகளாலே தொடுக்கப்பட்டதும் பாராட்டற் பாலதாம். விரிவஞ்சியே யிம்மட்டில்நிறுத்துகின்றனம்.

M. கோபாலகிருஷ்ணையர்.

இந்நூலைப்பற்றிய நண்பர் ஐயரவர்கள் அபிப்பிராயம் வருமுன்பு இவ்வாறு நாமே யெழுதநினைந்ததுண்டு. பற்பல வகையினுஞ் சிறந்த இந்நூலை ஆழ்ந்துகற்பார் மனக்களிப்பும், வியப்பும் அடைவாரென்பது திண்ணம். அன்றியும் இந்நூலையியற்றிய ஸ்ரீமத் வி. சிவஞானயோகிகளின் மதிநுட்பமும் பலபாஷைத் தேர்ச்சியும் யாவரும் அறிந்து கொண்டாடற் பாலவேயாம். ஆனால் சுவாமிகள் இந்நூலியற்றிய விஷயத்தில் எமக்குஒரு வருத்தமுண்டு. அதாவது இத்தகைய நூலானது முடியுடை மன்னராகிய மூவேந்தரிலொருவர்காலத்து ஆக்கப்படின் எத்தனை சீரும் சிறப்பும்செய்து உபசரித்து ஏற்பார்கள்? யானைக்கன்றும் வளநாடுங்கொடுப்பினும் பற்றாதே. நமது சக்கரவர்த்தியவர்கள் தமிழர் அல்லராதலின் இந்நூலால் அத்தகைய கௌரவம் அடைதற்கு இல்லாது போயிற்றே யென்பதுதான். ஆயினும் தமிழ்அபிமானிகள்யாவரும் கொண்டாடுவதே சுவாமிகட்குச்சன்மானமாம்.

பத்திராதிபர்.

உ

சிவாலய தரிசன விதி.

பாயிரம்.

கடவுள் வாழ்த்து.

சிவபெருமான்.

மறைமுடி யதனில் வயங்குவோன் யாவன் வாய்த்தமெய் யடியவ ரிதய
அறைதனி லுறைவோன் யாவனண் டங்க ளந்தத்தி னமர்பவன்யாவன்
நிறையரு ளுயிர்கட் கருளுவான்மன்றி னிலவவைந் தொழினடம் புரியும்
இறையவன் யாவ னன்னவன் பொன்னி னிணையடி யரசிவாழ்ந் திடுவோம்.

(இதன் பொருள்) வேத சிரசில் விளங்குவோன் எவன்? சிறந்த உண்மைத் தொண்டர்களது நெஞ்சமாகிய குகையில் எழுந்தருளியிருக்கின்றவன் எவன்? அசுத்தம் அசுத்தாசுத்தம் சுத்தமென்னும் மூன்று வகையாகிய அண்டங்களின் இறுதியில் தங்குவோன் எவன்? நிறைந்த கிருபையை ஆன்மாக்களுக்கு அருளும் பொருட்டு சிற்சபையில் விளங்கப் பஞ்சகிருத்திய நடனஞ் செய்கின்றவன் எவன்? அப்படிப்பட்ட உயர்ந்தோனாகிய சிவபிரானது பொன் போன்ற இரண்டு அரிய திருவடிகளையும் துதித்துயாம் வாழ்வாம் என்க.

நிவிர்த்திகலை பிரதிட்டாகலையிலடங்கிய அண்டங்கள் அசுத்தம். வித்தியாகலையிலடங்கிய அண்டங்கள் அசுத்தாசுத்தம். சாந்திகலை சாந்தியதீத கலையிலடங்கிய அண்டங்கள் சுத்தம். வேதசிரசில் விளங்குவோன் என்ற உண்மையை "அருமாமறையின் சிரத்தறிவே" எனவும், "செறியுநான்மறைச் சிரமிசைப்பரம்பொருள்" எனவும், "வேதமுடிவிலும் விளங்குயிர்தமது போத முடிவிலும் பொருந்தும் பேரொளி" எனவும், "பத்திக்கொத் தரும்ப விள்ளுங் கமலத்தும் வேதசிரத்தும்" எனவும் "ஒரும் வேதாந்த மென்றுச்சியிற் பழுத்த வாராவின்பவருங்கனி பிழிந்து சாரங்கொண்ட சைவசித்தாந்தம்" எனவும், கூறிய திருவாக்குக்களானும் உணர்ந்துகொள்க. உண்மைத் தொண்டர்களது நெஞ்சமாகிய குகையில் எழுந்தருளியிருக்கின்றவன் என்ற உண்மையை "கண்

ணீர்மல்க முன்பணிந்தேத்துந் தொண்டரகமலாற் கோயிலில்லை" என்னுஞ் சுருதியானும் உணர்க. அண்டங்களினிறுதியில் தங்குவோன் என்ற உண்மையை "அண்டமுடி தன்னிலோ" என்னும் திருவாக்கானும் உணர்ந்துகொள்க.

பஞ்சகிருத்திய நடன உண்மையை "பூமலி கற்பகப் புத்தேள் வைப்பு, நாமநீர் வரைப்பி னுனில வளாகமு, மேனைய புவனமு, மெண்ணீங் குயிருந், தானே வகுத்ததுன் றமருகக் கரமே, தனித்தனி வகுத்த சராசரப் பகுதி, யனைத்தையுங் காப்பதுன் னமைத்தகைத் தலமே, தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலு, மாற்றுவ தாரமு லமைத்ததோர், கரமே, யீட்டிய வினைப்பய னெவற்றையும் மறைத்துநின், றூட்டுவ தாகுநின் னூன்றிய பதமே, யடுத்தவின் னுயிர்கட் களவில்பே ரின்பங், கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே" எனவும், "தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற், சாற்றியிடு மங்கியிலே சங்காரம், மூற்றமா, யூன்று மலர்பதத்தே யுற்ற திரோதமுத்தி, நான்ற மலர்ப்பதத்தே நாடு" எனவும் கூறிய திருவாக்குக்களானும் உணர்ந்துகொள்க.

இன்னும் முதல்வன் நடனம் பஞ்சாக்கர நடனமுமாகும் அது "சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம், மார்க்கும் யகர மபயகரம், பார்க்கிலிறைக், கங்கி நகர மடிக்கீழ் முயலகனார், தங்கு மகரமது தான், என்பதனுலுணர்க.

இத்திருக்கூத்தானே ஆன்மாக்களுக்கு மும்மல நீக்கமெனப்படும் பாசவிடுதியும் சிவத்துவ விளக்கமெனப்படும் பரமானந்த வநுபூதியுங் கைகூடும் அது "மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டு மலஞ், சாய வமுக்கியருள் டானெடுத்து, நேயத்தா; லானந்த வாரிதியி லான்மாவைத் தானழுத்த, லெனெந்தை யார்பரதந் தான்" என்பதனுறிக.

அற்றேல் இங்ஙனங் கூறிப்போந்த தோற்ற முதலிய தொழில்களைச் சிவபிரான் செய்தல் தற்பயன் குறித்தோ அல்லதுபிறர்பயன் குறித்தோ இரண்டுமன்றிப்பயன் குறியாது விளையாட்டுநிமித்தமோ.

என்று ஆராயலுறின் அவன் மலரகிதனுகையாலும், ஆநந்த சொரூபியாய் நிலைபெற்றிருத்தலானும், ஒப்பாரும் மிக்காருமில்லாதவனுய்ப்பொருந்துகையாலும், இடர் நீங்கலும், சுகமடைதலும், புகழ்பொருந்துதலும், தனக்குநேரும்படி விரும்பாதவனுகையாலுந்தற்பயன் குறித்தன்று. " மந்தன்னுனும் வீணுக ஒரு தொழிலினும் பிரவிருத்தியுறான், " என்று சுருதி கூறுகையாலும் பேரறிவும், பெரருளும், பேராற்றலும், உடையவனுகையாலும், விளையாட்டைக் கருதி ஒரு தொழிலும் செய்வானல்லன். ஆதலால் விளையாட்டு நிமித்தமுமன்று உயிர்கள்மேல் வைத்திருக்கும்பேரருளால் இறைவன் அக்கிருத்தியங்களைச்செய்வன் ஆதலின்பிறர்பயன் குறித்தே என்று தெளிவாயாக.

" காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி " எனச் சுருதி கூறுவதே யெனில் ஐங்கலப்பாரஞ் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டு என்பது போல முதல்வன் காரணத்தானன்றிச் சங்கற்ப மாத்திரையால் அத்துணை எளிதிற்செய்யப்படுதலை நோக்கியேயாகலின் என்க.

ஐந்தொழிலைக் கூறுது " காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி " என முத்தொழில் மாத்திரையே கூறியது யாது காரணமெனின் மறைப்பையும் அருளையும் நிலையிலும் இறுதியிலும் அடக்கி அங்ஙனம் கூறியருளினுரென்க.

அற்றேல் அநுக்கிரகம் ஒழித்து ஒழிந்த நான்கு கிருத்தியமும் பிறப்பிறப்புக்களிற் படுத்துத் துயருறுத்துவன வாகலின் அவற்றைச் செய்வது அருளாமாறு யாங்ஙனமெனின் கூறுதும், ஆன்மாக்களுடைய கன்ம முழுவது நீங்கு முகத்தால் மலபாகம் வரச்செய்தலின் பொருட்டுச் சிருட்டியும், கன்மங்கழியுமாறு அதனை நுகர்வித்தலின் பொருட்டுத் திதியும், கன்மம் பரிபாகமாகும் பொருட்டும் இளைப்பாற்றற் பொருட்டும் சங்காரமும், கன்மவொப்பினை வருவித்து மலங்களை முதிர்வித்தற்பொருட்டு திரோபவமும், பாச நீக்கமும், சிவப்பேறும் வருவித்தற்பொருட்டு அநுக்கிரகமுஞ் செய்தலால் ஆராயும் வழி ஐந்தொழிலும் அருட்செயலே யாமென்க.

உ தா ர ண ம்.

சித்தியார்.

" அழிப்பிளைப் பாற்ற லாக்க மவ்வவர் கன்ம மெல்லாங்
கழித்திட நுகரச் செய்தல் காப்பது கன்ம வொப்பிற்
றெழித்திடன் மலங்க ளெல்லா மறைப்பருள் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம்வீடு பார்த்திடி னருளே யெல்லாம். "

என்பதனுற்றெளிக. இப்பஞ்ச கிருத்தியம் தூலபஞ்சகிருத்தியம், சூக்கும பஞ்சகிருத்தியம் அதி சூக்கும பஞ்ச கிருத்திய மென்று மூன்று வகைப்படும்.

அவையாவன சிருட்டி முதலிய, தூலபஞ்சகிருத்தியம். கேவலத்தில் ஆன்மாக்களுக்கு அறிவித்தற் பொருட்டு தானறிதல் சூக்குமபஞ்சகிருத்தியம், உயிர்களோடு உடனாய் நின்றுணர்த்துதலே அதி சூக்கும பஞ்ச கிருத்தியம், இவ்வைந்து கிருத்தியங்களும் சடம் சித்து என்னும் இரண்டினிடத்தும் இரண்டு பிரிவாய் நிகழும் அவையாவன சிருட்டி திதி சங்காரம் மூன்றும் சடம்வாயிலாக ஆன்மாவினிடத்திலும், திரோபவமும் அநுக்கிரகமும் சடம் வாயிலாத, வின்றி நேரே ஆன்மாவினிடத்திலும் நிகழும் என்க.

இனிச்சாக்கிராவத்தையில் ஐம்பொறிகளால் ஐம்புலன்களை நுகரும் பொழுது நிகழும் பஞ்சகிருத்தியங்களாவன. விடயங்களைப் பற்றுவதே சிருட்டி. விடயங்களை அருந்துவதே திதி. அவ்விடயங்களை அறியுந்தன்மை வேருகப்பிரித்துக் காணவொண்ணுது அதில் அழுந்துதலே சங்காரம். அவ்விடயங்களை ருசிப்பித்திடுதலே திரோபவம். இது இனிதன்று! இது இனிதன்று! என உணர்தலே அநுக்கிரகம். இன்னும், ஏதாவது ஒருபொருளைநினைந்து மனம் எழுதல் சிருட்டி. அதனைநினைத்து மகிழ்ச்சியடைகுதல் திதி. அப்பொருளை மறந்திடுதல் சங்காரம். அந்தப்பொருள் இன்னதென்று ஞாபகத்தில் வாராமல் மயங்குதல் திரோபவம். பின்பு அந்தப்பொருளைத் தெளிந்தறிகுதல்அநுக்கிரகம். இவ்வாறு ஒவ்வொருகருவிகளினும் ஆன்மாக்கலந்து விடயங்களை அறிந்து அநுபவிக்கும்போதெல்லாம் சிவபிரானுடைய பஞ்சகிருத்தியங்கள் நிகழும் விதங்களை நன்ருய் ஊகித்து அறிந்துகொள்க. (க)

இங்ஙனம்,

சுப்பிரமணிய பிள்ளை,
மதுரை, திருஞானசம்பந்தசுவாமிகள் மடம்.

நல்லோரிணக்கம்.

இவ்வுலகத்தில் தொத்து வியாதிகளைப் பற்றியும், அவற்றை விசேஷமாய்ப் பரவவொட்டாமல் விலக்கவேண்டுவது அவசியமென்பதைப்பற்றியும் நாம் விசேஷமாய்க் கேள்விப்பட்டிருக்கிறோம். சவுக்கியங்கள் தொத்துவதைப் பற்றியும், அவற்றைத் தேடுவது மிகவும் அவசியமென்பதைப் பற்றியும் மாத்திரம் நாம் கேள்விப்பட்டதேயில்லை. ஆயினும் யோசித்துப் பார்க்கையில் தொத்துகிற வலிமையில் இவ்விரண்டனுள் ஒன்று மற்றொன்றுக்குக் குறைவுபட்டதல்லவெனத் தெளிவாகின்றது. நோயாளிகள் படுத்திருக்குமிடத்திலிருந்து விஷக்காற்று வெளிப்படுகிறதெனவும், அந்தக் கெட்ட காற்றைச் சுவாஸம் வாங்கி விடுவது அபாயத்திற்கு இடமென்றும் சொல்வீர்களானால், அவ்வண்ணமே தேக சவுக்கியமும் பலமுள்ள விடங்களிலிருந்து சவுக்கியம் வியாபிக்கின்றது; அவற்றைப் பெறுபவர்களுக்குத் தேகதார்ட்டியமும் அவசியம் விருத்தியாகுமென்று சொல்லத் தடையென்ன? ஒன்றை விலக்குவது எப்படி அவசியமோ அப்படியே மற்றொன்றை வேண்டியழைப்பதும் ஒவ்வொரு காலத்தில் தேகப் பயிற்சிக்கு இன்றியமையாததாயிருக்கும். இவ்வண்ணமே கெட்ட குணங்களும் கெட்ட நடக்கைகளும் தொத்துவதைப்பற்றி நாம் மிகவும் அதிகமாய்க் கேள்விப்பட்டிருக்கிறோமல்லவா? அதைப்போல் அவ்வளவு உறுதியாகப் பிடித்துக்கொள்வது மற்றொன்றும் இல்லை. புத்தி தெரியாத சிறு பிள்ளைகளைக் கெட்ட பிள்ளைகளோடு கூடாமல் காக்கும் விஷயத்தில் நமக்கு எவ்வளவு ஜாக்கிரதைவேண்டுமோ அவ்வளவு மற்றெந்த விஷயத்திலும் வேண்டுவதில்லை. ஆயினும் அதை அப்படி விலக்குவது மாத்திரமே போதாது; இக்கெட்ட குணங்கள் தொத்தாமலிருப்பது எவ்வளவு அவசியமோ அவ்வண்ணமே புத்திப் பயிற்சி, நீதி நல்லொழுக்கம், தேகவலிமை முதலியவைகளைத் தொத்தவிடுவது அவசியமாம். தோட்டக்காரன் தன் தோட்டத்திலுள்ள களை, கல் முதலியவைகளை மாத்திரமே எடுத்து அப்புறப்படுத்துவது என்ன உபயோகப்படும்? அந்நிலம் நன்றாய்ச் செழிக்கும்படி தக்க எருப்போட்டு நிலத்தை நன்றாகப் பண்படுத்தினாலல்லது அவனுடைய அந்தப் பிரயாசை அத்தனையும் வீண்போகுமல்லவா? காடுகளில் மனிதருடைய செய்தொழிலில்லாமலே மரஞ் செடிகள் செழித்து வளர்ந்திருக்குமானால், அவ்விடத்திலும் நமக்குத் தோன்றாத ஒரு பிரகிருதிச் செயலால் அவை ஒன்றுக்கொன்று செழுமையைத் தொடரச் செய்துகொண்டு விருத்தியாகின்றனவென நாம் உறுதியாக நம்பவேண்டும்.

விருக்ஷவகைகளிலெப்படியாவது ஆகட்டும். மனிதஜாதியில் சகலவிதமான நன்மை, அழகு, சாமர்த்தியம் முதலியவெல்லாம் தொடருந் தன்மையுடையவை யென்பதற்குச் சந்தேகமேயில்லை. வேண்டுமென்று நாம் முயன்று பயிற்றுவதினால் மாத்திரமேயல்ல, நேராகச்

சம்பந்தப்படுவதனாலேயும் தொடருகின்றன. எவனாவது ஒருவன் சிறிதுகாலம் நல்ல நடக்கையுள்ள உத்தமபுருஷர்களோடு சகவாசம் பண்ணுவானானால் அவனும் சிறிதளவு நன்னடக்கையுடையவனாகி மேன்மை பெறுவான். முதலில் கொஞ்சங் கொஞ்சமாய் மோந்து கற்றுப் பழகாதவனுக்கு எந்தத் திறமைதான் திடீரென்று சுவாதீனமாகும்! நன்றாய்த் திருந்திய நல்லோர்களோடு நெருங்கி இணங்குகிறவன் தானும் அவர்களுடைய தன்மையை மெல்லமெல்ல அப்பியசித்துக் கொள்வான். பூததயை பச்சாத்தாபம் உடையவர்களோடு கூடியிருப்பவனுக்கும் பிராணிகளிடத்தில் ஈவு இரக்க முதலியவை தானே உற்பத்தியாகும்.

ஆதலால் சிறுபிள்ளைகளைக் காப்பாற்றுகின்ற ஒவ்வொருவரும், அச்சிறுவர்கள் தீமைகளைவிட்டு விலகியிருக்க கண்காணிப்பது மாத்திரமேயல்லாமல் நல்லோர்களோடு இணங்கியிருக்கவும் பார்த்துவரவேண்டும்; கெட்ட எண்ணங்களாகிய விஷக்காற்றில் நடமாடாமல் பார்த்துவருவது மாத்திமேயன்றி நல்ல எண்ணங்களும், உதாரபுத்தியும் கம்பீரமான நடக்கையுமாகிய பரிசுத்தமாய் வீசும் வெளிக்காற்றிலேயே உலாவும்படியாகவும் செய்து வரவேண்டும். சிறுவர்கட்குப் பெரியோர் செய்யவேண்டிய காரியம் இரண்டு. அவற்றுள் ஒன்று நேராகப் புத்தி பூர்வமாய் நிர்ப்பந்தித்துப் போதிக்க வேண்டுவது; மற்றொன்று அபுத்தி பூர்வமாயே தெரியாமல் தற்செயலாகக் கற்பிக்க வேண்டுவது. முதலாவதை மனச்சாக்ஷியுள்ள எல்லோரும் செய்ய முயல்வார்கள். இரண்டாவது நல்ல காற்றைப் போல்க் கண்ணுக்குப் புலப்படாமலிருப்பதால் அதை அநேகர் அலக்ஷியஞ் செய்கின்றனர். எப்படியெனில், தகப்பன் பிள்ளைகளுக்கு நீதி நல்லொழுக்கங்களின் கடமையையும், உண்மை பிரமாணிகம் முதலியவற்றின் பெருமையையும் அவசியம் கற்பித்துக் கொடுப்பான். இளமைப் பருவத்தில் பெற்றோரிடத்தினின்றும் பெற்றுக்கொள்ளுகிற நற்போதனையானது ஒருபோதும் புத்தியை விட்டு விலகாததலால் இது மிகவும் சிறந்ததே? ஆயினும் நீதியொழுக்கங்களுள்ளவர்களின் மத்தியில் அப்பிள்ளைகளை வசிக்கச்செய்வது இதைப்பார்க்கிலும் மிகச்சிறந்ததாம். எப்படியெனில்,

மிகக் கொடியவையான துர்க்குணங்களினின்றும் சிறுவர்களை விலக்கிவைத்திருந்தாலும், பாடசாலையில் நடக்கிற அற்ப மோசங்களும், வீடுகளில் நடக்கின்ற அற்பமான சூதுகளும், வியாபாரங்களில் நடக்கின்ற தந்திரங்களும், தரித்திரம் தளர்ச்சி அறியாமை இவற்றால் விளையும் அற்ப புத்திகளும் விடாமல் கொஞ்சங் கொஞ்சமாய் அவர்களுக்குப் பழக்கமாகும். தம்மைப் பார்க்கப் பெரியோராயிருப்பவர்கள் செய்யும் இச்செய்கைகளைப் பார்த்த பிள்ளைகள் தமது புத்திக்குத் தோன்றாமலே இக்கெட்ட குணங்களில் பழகி ஆதியில் பெ

ற்றோர் கற்பித்த நற்புத்தியை மறந்து விடுவார்கள். அப்படியின்றி அச் சிறுவர்கள் நல்லோர்களுடைய மத்தியில் இணங்கி நடப்பார்களானால், அவர்களுடைய நற்குணங்களெல்லாம் தமக்குத்தாமே அப் பிள்ளைகளுக்குப் பழகி அவர்களுடைய வாழ்நாளுக்குஒரு முக்கியமான வழி காட்டியாகும்.

உலகத்தில் பலகுணங்கள் பலவிதமாய் இருப்பதாலும், "களவுங் கற்று மற" என்கிறபடி, கெட்ட குணங்களில் பழகுவதும் பிள்ளைகளுக்கு அவசியமாயிருப்பதாலும் சிறுவர்கள் நல்லோர்களோடு மாத்திரம் சகவாஸம் செய்வது போதாது; கெட்டவர்களோடும் பழகவேண்டுமென்பது மெய்யே. ஆயினும் இன்றியமையாததிருப்பதைப் பற்றி நல்லோர் இணக்கத்தை முக்கியமாகச் சொன்னது. நன்மை தீமைகளைப் பகுத்தறியும் திறமை வாலிபர்களுக்கு மிகவும் சொற்பமாகையால் அந்தத்திறமை உண்டாகும் பொருட்டு, காட்டுகிற நற்குணங்களுக்கு எதிரிடையான தீக்குணங்களும் இவையென்று எடுத்துக்காட்டி அவற்றை விட்டு நற்குணங்களைப் பெருமைப்படுத்தும்படியாகச் செய்வது அவசியமேயாம்.

தேகத்தைச் சுத்தமாக வைத்துக்கொண்டிருப்பவனுக்கு அழுக்கோடிருப்பவர்களைப் பார்க்க வெறுப்பு உண்டாகுமேயொழிய, ஈவு இரக்கமில்லாதிருப்பவர்களைப் பார்க்க வெறுப்பு உண்டாகாதல்லவா; ஆதலால், உதாரபுத்தி உடையவனே அற்பமான எண்ணங்களை விலக்குவான். நல்லோரிணக்கத்தில் நற்குணங்கள் இப்படித் தொத்திக் கொள்வதாயிருக்கும்போது. அதைப்பழக்குவதைப் பார்க்கப் பெரிய காரியம் வேறென்ன இருக்கின்றது. நிர்ப்பந்தித்து நன்மைகளை நாம் உபதேசிப்பதினால் ஆகும் உதவியைப்பார்க்கிலும், நாம் அவற்றை நடத்திக் காட்டுவதனாலாகும் உதவி மிகவும் சிறந்தது. புஷ்பங்களினின்றும் வாசனை உண்டாவது போலவே நல்லோர்களிடத்தி னின்று நன்மை தனக்குத் தானே தெரியாமல் உண்டாகின்றது. அப்படிப்பட்ட நல்லோர்களைக் காண்பதே நற்குணங்களுக்கு ஒரு தூண்டுகோல் போலாகும்.

நமது தேகத்தோடு கூடவே நாம்செய்யும் நற்குண நற்செய்கைகளும் அழிந்து போவதாயிருந்தால், அவற்றை விருத்திபண்ண நாம் வீணேபாடுபடுவானேன் என்று அதனிடத்தில் அலக்ஷியமாயிருக்கவும் கூடும்; அப்படியன்றி அக்குணங்களெல்லாம் தமக்குள்ள சர்வ சக்திகளோடு பிறரிடத்தில் தொத்தி என்றும் அழியாமல் மேன்மேலும் உலகத்தில் வியாபித்துக் கொண்டிருக்கின்றனவென்றால், அப்படிப்பட்ட நற்குணங்களை விருத்தி பண்ணாமல் நாம் எப்படி பின்னடையலாம்

ஜனவிநோதினி.